சங்கையர் புனைதக் கொள்ளை கொள்ளும்
தங்க, வைர நகைகளுக்கு



அம்பிகா ஜுவலர்ஸ்
77, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தொலைபேசி. 422839. 434238

செய்தி இதழாக பதிவு பெற்றது

# தினபதி

ரூ 3/50

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல 6583 1990 மே 8 செவ்வாய்க்கிழமை ★ ★ ★ தினபதி

தரமான 22 கரட்
தங்க வைர நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்

Ambiga
JEWELLERS (PTE) LIMITED
SEA STREET, COLOMBO-11.
Phone: 422839 434238

மட்டக்களப்பு எம். பி.

# சாம் தம்பிமுத்து சுட்டு

# கொல்லப்பட்டார்

## அவரது மனைவி கலாவும் ஆபத்தான நிலையில்

### கொழும்பு கிரகரி றோட்டில் சம்பவம்

— இரா செல்வராஜா —

கொழும்பு, மே. 7

**மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற எம். பி. திரு. சாம் தம்பிமுத்து நேற்று திங்கட்கிழமை பகல் கொழும்பில் வைத்து இனம் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார். துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளான அவரின் மனைவி கலா தம்பிமுத்து மிக ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.**

இச்சம்பவம் நேற்று பகல் 1-30 மணியளவில் கொழும்பு கிரகரி வீதியில் உள்ள கனேடியத் தூதரகத்திற்கு முன்பாக நிகழ்ந்தது.

திரு. தம்பிமுத்துவும், திருமதி கலா தம்பிமுத்துவும் காரை விட்டு இறங்கி பிரஸ்தாப தூதரகத்தை நோக்கி நடந்த சென்றனர்.



நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது.

1989 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் திரு சாம தம்பிமுத்து தமிழர் கூட்டணி சின்னத்தில் ஈ பி ஆர் எல் எப் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

### சோமண்ணை



வயிற்றுப் பட்டியை இறுக்க இது உதவும பாருங்கோ,

### குணவர்தன மக்கள் கட்சியின் பதில் தலைவர்

கொழும்பு, மே 7

இலங்கை மக்கள் கட்சியின் பதில் தலைவராக கட்சியின் பிரதித் தலைவர் திரு டட்லி குணவர்த்தன தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## 100 கிராம் பாண் ரூ 1.25

### அடுத்தவாரம் முதல் அறிமுகம்

கொழும்பு, மே 7

அடுத்த வாரம முதல் நூறு கிராம எடையிலுள்ள பாண், ஒரு ரூபா 25 சதத்துக்கு விற்கப்படும.

இந்தப் பாண் முதலில் கொழும்பு மாநகரில் அறிமுகப்படுத்தப்படும பின்னர் நாளடைவில் நாடு முழுவதிலும அறிமுகப்படுத்தப்

(2 ஆம பக்கம பார்க்க)

## ஒழுக்க கோவையை மீறும்

## எம். பிகளை வெளியேற்றுவேன்

### —ஜனாதிபதி

கண்டி, மே 6

நான் வழங்கிய ஒழுக்கக் கோவையை பின்பற்றத் தவறும ஆளும கட்சியின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களையும கட்சியில் இருந்து வெளியேற்றுவேன்—

இவ்வாறு ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச அறிவித்திருக்கிறார்—

வீடமைப்பு ராஜாங்க அமைச்சரின் அனுசரணையுடன் பேருவளைத் தொகுதியில் நடைபெற்ற கிராம எழுச்சி கொண்டாட்டங்களை ஜனாதிபதி திறந்து வைத்தார்— அவர் அம்பேபிட்டி கலைவிழா நடந்த கூட்டத்தில் உரையாற்றினார்—

அவர் மேலும் கூறியதாவது—

என்னுடைய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒழுக்கக் கோவை ஒன்றை வழங்கி உள்ளேன்— அவர்கள் அதை பின்பற்றி நடக்க வேண்டும—

அதன்படி ஒழுகத் தவறினால் அவர்களை கட்சியில் இருந்து நீக்க நடவடிக்கை எடுப்பேன்—

இதன் மூலம ஆட்சியாளர்கள் மக்களை மதிக்கும, கௌரவிக்கும நிலைமை உண்டாகும—

பேருவளையில் நடைபெறும கிராம எழுச்சியானது 15 அவது பிரதேச கிராம எழுச்சியாகும—

ஜனாப் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தன்னலமற்ற சேவையையும, சிறந்த சேவையையும இக் கிராம எழுச்சிக்காக செய்துள்ளார்—

கிராம எழுச்சியின் மூலம

(2 ஆம பக்கம பார்க்க)

## பத்திரிகையாளர் கடத்தப்பட்டார்

கொழும்பு மே, 7

ஊவா மாகாண செய்தியாளர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் ஒருவர் ஆயுதம தாங்கிய நபர்களால் கடத்தப்பட்டார்—

15 பேர் கொண்ட ஆயுத கோஷ்டியினர் கடந்த 4 ஆம திகதி இரவு சுமார் 8-00 மணியளவில் திரு ஹர்பட் விதானகே என்ற செய்தியாளரைக் கடத்தினர்—

புத்தளம பெலவத்தை பஸ் நிலையத்தில் நிர்வாணமாக இவர் கட்டி வைக்கப்பட்டிருந்தார் என புத்தளப் பொலீஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக புத்தள பொலீஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்—

[ஊ—ம]

## 135 கடத்தல் தங்க சங்கிலிகள் சிக்கின

கொழும்பு மே, 7

காலணிக்குள் 135 தங்கச் சங்கிலிகளை கடத்தி வந்த இலங்கையர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில்

சுங்க அதிகாரிகளான திரு லங்காதேவ, திரு குணவர்த்தன ஆகியோரால் கைது செய்யப்பட்டார்—

[ஊ—ம]

1-30 மணியளவில் கொழும்பு கிரகரி வீதியில் உள்ள கனேடியத் தூதரகத்திற்கு முன்பாக நிகழ்ந்தது.

திரு, தம்பிமுத்துவும, திருமதி கலா தம்பிமுத்துவும காரை விட்டு இறங்கி பிரஸ்தாப தூதரகத்தை நோக்கி நடந்த சென்றனர்.

அந்த நேரத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இரண்டு பேர் அவர்களை நோக்கி சரமாரியாக துப்பாக்கி வேட்டுகளை தீர்த்தனர். பின்னர் அங்கிருந்த தப்பிச் சென்றனர். பொலீஸாரின் ஆரம்பப் பொலீஸ் விசாரணைகளில் இருந்து இந்த விவரம தெரிய வருகிறது.

திரு. தம்பிமுத்துவிற்கு தலையிலும மார்பிலும சூடுகள் விழுந்தன. அவர் அந்த இடத்திலேயே மரணமானார்.



சாம தம்பிமுத்து

திருமதி கலா தம்பிமுத்துவிற்கு இரண்டு சூடுகள் விழுந்ததாகச் சொல்லப்படுகிறது. அவர் ஆபத்தான நிலையில் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் தீவிர கண்காணிப்புப் பிரிவில் சேர்க்கப் பட்டிருக்கிறார். அவரின் இருக்கிறது.

1989 ஆம ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் திரு சாம தம்பிமுத்து தமிழர் கூட்டணி சின்னத்தில் ஈ பி ஆர் எல் எப் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

இவர் சட்டத்தரணியாக தொழில் செய்தவர். மட்டக்களப்பு மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவராகவும கடமையாற்றியிருக்கும இவருக்கு வயது 57.

திருமதி கலா தம்பிமுத்து (வயது 48) காலஞ்சென்ற செனட்டர் மாணிக்கத்தின் மகளாவார். கடந்த வருடம டிசம்பர் மாதம 13ஆம திகதி இவர் மட்டக்களப்பில் வைத்து

(2 ஆம பக்கம பார்க்க)

கொழும்பு, மே 7

இலங்கை மக்கள் கட்சியின் பதில் தலைவராக கட்சியின் பிரதித் தலைவர் திரு டட்லி குணவர்த்தன தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் பிரதம செயலாளர் திரு வை பி டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

இவ்வாண்டு ஜூலை மாதம இறுதிப் பகுதியில் கட்சியின் மாநாடு நடைபெறும. அவ்வேளை கட்சியின் சகல பதவிகளும வாக்கெடுப்பின் மூலம நிரப்பப்படும.

அதுவரை கட்சியின் பிரதம செயலாளர் திரு வை பி டி சில்வா சகல பொறுப்புகளையும கவனித்துக் கொள்வார். (ண—ழ)

கொழும்பு மே, 7

காலணிக்குள் 135 தங்கச் சங்கிலிகளை கடத்தி வந்த இலங்கையர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டார்.

இந்த 135 தங்கச் சங்கிலிகளும சுமார் 1½ கிலோ எடை கொண்டவையாகும.

கடத்திவந்த நபருக்கு 16 லட்சம ரூபா அபராதம விதிக்கப்பட்டது.

அபராதத் தொகையில் ஒரு பகுதியை அந்நபர் செலுத்தினார்.

135 தங்கச் சங்கிலிகளும அ ர சுடைமையாக்கப்பட்டன. சந்தேக நபர் உதவி சுங்க அதிகாரிகளான திரு லங்காதேவ, திரு குணவர்த்தன ஆகியோரால் கைது செய்யப்பட்டார். [ண—ழ]

இது தொடர்பாக ... பொலீஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். [ண—ழ]

# இரத்தினபுரியில் ஆறுகள் பெருக்கெடுப்பு

கொழும்பு, மே. 7

இரத்தினபுரி பகுதியில் நேற்று முன்தினம இரவு பெய்த பலத்த மழையினால் பல ஆறுகள் பெருக்கெடுத்துள்ளன.

இதனால் இரத்தினபுரி மத்திய பஸ் தரிப்பு நிலையத்திலும சந்தை அமைந்துள்ள இடத்திலும வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருக்கிறது.

இப்பகுதியைச் சேர்ந்த 400க்கும அதிகமானோர் பாதுகாப்பான இடங்களுக்கு இடம பெயர்ந்துள்ளனர்.

இடம பெயர்ந்துள்ள மக்களுக்கு வெள்ள நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன என்ற இரத்தினபுரி உதவி அரசாங்க அதிபர் திரு கே பி தயாரத்ன தெரிவித்தார்.

இதேவேளை குருவிட்ட பகுதியில் இரு இடை பாதைகள் நீரில் மூழ்கியுள்ளன. (ண-வ)

அரசமைப்பு 6ஆவது திருத்தம்:

# ஏனைய கட்சிகளுடன் புளொட் பேச்சுவார்த்தை

கொழும்பு, மே. 7

அரசமைப்பின் 6 ஆவது திருத்தத்தை நீக்கும விடயத்தில் அபிப்பிராயம திரட்டுவதற்காக ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) பல கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினரும, உபதலைவருமான திரு கரவை எஸ் கந்தசாமி இதனைத் தெரிவித்தார்.

தமது கட்சி கடந்த பெப்ரவரி மாதம ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சு வார்த்தையின் போது 6ஆவது அரசமைப்பு திருத்தம தொடர்பாகவும ஆராய்ந்ததாகவும, இந்தத் திருத்தத்தை நீக்குவதற்கு ஜனாதிபதி அப்போது இணக்கம தெரிவித்ததாகவும அவர் தெரிவித்தார்.

(2 ஆம பக்கம பார்க்க)

யாழ். மட்டக்களப்பு நீங்கலாக

# பிச்சைக்காரர் எண்ணிக்கை 23,000 என மதிப்பீடு

கொழும்பு. மே 7

யாழ்ப்பாணம, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் 23 ஆயிரத்துக்கும அதிகமான பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள்.

சமூக சேவைகள் அமைச்சு அண்மையில் நடத்திய மதிப்பீடு ஒன்றில் இருந்து இந்த விவரம தெரிய வந்திருக்கிறது.

இந்த மதிப்பீட்டை அடுத்த பிச்சைக்காரர்களை கைது செய்து மறுவாழ்வு அளிக்கும வேலைத் திட்டம ஒன்றை செயல்படுத்துவது என திட்டமிடப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்தின் கீழ் கொழும்பு பகுதியில் மட்டும மூவாயிரத்துக்கும அதிகமான பிச்சைக்காரர்கள் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மறு வாழ்வு, மறு சீரமைப்பு மற்றும சமூக சேவைகள் ராஜாங்க அமைச்சர் திருமதி சமந்தா கருணாரத்ன இத்தகவலைத் தெரிவித்தார்.

பிடிக்கப்பட்டிருக்கும பெண் பிச்சைக்காரர்கள் தங்கொடுவில மறுவாழ்வு பகுதியிலும ஏனையோர் ரிதியகம முகாமிலும வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இவர்களுக்கு தகுந்த தொழிற் பயிற்சியோடு வேலை வாய்ப்புகளை அளிக்கவும தேவையான காணி, வீட்டு வசதிகளை வழங்கவும நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக திருமதி சமந்தா கருணாரத்ன தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டோரிடையே காணப்படும பாடசாலை செல்லும வயதுடைய பிள்ளை

(2 ஆம பக்கம பார்க்க)

# வடபகுதி சூறாவளி அபாயம் நீங்கியது

கொழும்பு, மே 7

வட பகுதியை நோக்கி இருந்த சூறாவளி அபாயம் நண்பகலுடன் நீங்கி விட்டதாக வானிலை அவதான நிலையம நேற்று மாலை அறிவித்தது.

யாழ்ப்பாணத்தில் இருந்து தென் கடலில் 250 கிலோ மீட்டர் தொலைவில் இந்த சூறாவளி மையம் கொண்டிருந்தது.

நேற்றுக் காலை 160 கிலோ மீட்டர் வரையும் வடபகுதியை

(2 ஆம பக்கம பார்க்க)

ரயில் பாலம் அருகே

# கழுத்து வெட்டிய சடலம் கண்டெடுப்பு

கொழும்பு, மே 7.

கழுத்து வெட்டப்பட்ட நிலையில் மூர்க்கமான முறையில் கொலை செய்யப்பட்ட இனந் தெரியாத நபர் ஒருவரின் சடலத்தை அட்டன் பொலீஸார் கண்டெடுத்தனர்.

அட்டன் - ரொசெல்லை ரயில் பாலத்துக்கு அருகில் கொலை செய்யப்பட்டு பின்னர் ரயில் பாதை வழியாக சடலம இழுத்துச் செல்லப்பட்டு பாலத்துக்குக் கீழேயுள்ள கால் வாயில் போடப்பட்டிருந்தது.

ரயில் பாதையை பரிசோதிக்கும தொழிலாளர் ஒருவரே இச் சடலத்தை முதலில் கண்டு அட்டன் பொலீஸாருக்கு அறிவித்திருக்கிறார்.

5 அடி 4 அங்குலம உயரமுடைய சுமார் 30 அல்லது 35 வயது மதிக்கத்தக்க இந்த இனந் தெரியாத நபரின் சடலத்தை அடையாளம காண அட்டன்

(2 ஆம பக்கம பார்க்க)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

# வெளிநாட்டு தொழில் மோசடி தடுக்க பேச்சு

கொழும்பு மே, 7

வெளிநாட்டுத் தொழிற் துறையில் ஏற்படும் புலதரப்பட்ட மோசடிகளைத் தவிர்ப்பதற்கான சட்ட திட்டங்களை உள்ளடக்கிய நிபந்தனைகள் பற்றி மேற்காசிய நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

அதனைத் தொடர்ந்து இந்தச் சட்டதிட்டங்கள் அங்கீகரிக்கப்படும்.

அரசு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தொழில், தொழிற்பயிற்சி அமைச்சர் திரு ஜீ எம் பிரேமச்சந்திரவின் யோசனையின் பேரில் இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிபந்தனைகள் பற்றி சர்வதேச மட்டத்தில் இணக்கத்தைப் பெறுவதற்காக வெளிவிவகார அமைச்சுடனும் சம்பந்தப்பட்ட துறையினருடனும் தற்போது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

இந்த ஏற்பாட்டினால் தொழில் ஏஜென்சிகள் மற்றும் தரகர்கள் ஆகியோர் புரியும் மோசடிகள் குறையும் என்றும் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

(இ—007)

## தெற்கில் அனல் மின் நிலையம்

# சூழல் பாதிப்பை ஆராய குழு நியமனம்

கொழும்பு, மே. 7

தென் மாகாணத்தில் அமையவிருக்கும் உத்தேச அனல்மின் உற்பத்தி நிலையத்தினால் ஏற்படும் சுற்றாடல் பாதிப்பு, குறித்து ஆராய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதனை மின்சக்தி எரிசக்தி அமைச்சர் திரு சந்திரா பண்டார கூறினார்.

இந்த அமைப்பின் உற்பத்தி நிலையம் அமையும் பிரதேசம் கடலுக்கு மிக அருகில் இருப்பதால் சுற்றாடலுக்கு அதிகபாதிப்பு ஏற்பட மாட்டாது.

கழிவுகளை வெளியேற்றும் புதிய திட்டம் காரணமாக இயன்றவரையில் சுற்றாடல் பாதிப்புறுவது தவிர்க்கப்படும்.

இந்த நிலையம் அமைவதால் புதிதாக தொழில் வாய்ப்புக்கள் பெருகும். அத்துடன் தென்பகுதி துறைமுகமும் அபிவிருத்தி அடையும்.

கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு மின்வசதி கிடைக்கும்.

இந்த நிலையம் 129 மெகவாட் முதல் 1000 மெகவாட் வரை மின்சாரத்தை கூடுதலாக உற்பத்தி செய்யும் என்றும் அமைச்சர் கூறினார்.

(இ-007)

# பிறந்த மண்ணில் உழைத்த மக்களை நாடு கடத்துவதா?

## இது மனித உரிமைக்கு மாறானது: அய்யாத்துரை

கொழும்பு, மே. 7

இந்திய குடியுரிமை பெற்றிருப்பவர்கள் இரண்டாவது மூன்றாவது பரம்பரையினர், இவர்கள் இன்று தாங்கள் பிறந்த நாட்டை விட்டு, உழைத்த நாட்டை விட்டு வெளியேற மறுக்கின்றனர். இவர்களை அரசாங்கம் கட்டாயமாக நாடு கடத்த முனைவது மனித உரிமைக்கு மாறான செயலாகும்.

இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர் திரு டி அய்யாத்துரை பத்திரிகைக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

இந்தியா செல்ல வேண்டும் என்று உண்மையிலேயே விரும்பி மனுப்போட்ட, குடியுரிமை பெற்ற கிட்டத்தட்ட ஐந்து லட்சம் பேர் நாடு திரும்பி விட்டனர். இன்று இருக்கும் 84,000 பேரும், அவர்களின் சந்ததியினரும் இந்தியாவைப் பற்றி அறிந்திராதவர்கள்.

இவர்களின் தாய் தந்தையர்கள், பாட்டன் பாட்டிமார்கள் தான் மனுப் போட்டவர்கள். இவர்கள் இன்று உயிரோடு இல்லை. அவர்களின் பிள்ளைகளும், பேரன் பேத்திமார்களும் இருக்கிறார்கள்.

இவர்கள் இந்த ஒப்பந்தத்திற்குக் கட்டுப்பட வேண்டியவர்

சந்ததியினரையும் அவர்கள் விருப்பப்படி இந்த நாட்டுப் பிரஜையாக ஏற்றுக் கொள்வதே மனிதாபிமான செயலாகும்.

அதை மீறி நாடு கடத்த முற்படும் போது, அது நாட்டில் அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்தும் நடவடிக்கையாக அமையாது என்பதை அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே இம்மக்களை நாடு கடத்தும் திட்டத்தைக் கைவிட்டு அவர்களின் பிரச்சினையை மனிதாபிமானத்தோடு அணுகி தீர்வுக்காக முன்வர வேண்டும்.

அத்தகைய நடவடிக்கை அல்லாத வேறு எதையும் மலையக மக்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

(இ-ஙு)

## ஒரு பேனாவுக்காக

# அக்கா — தம்பி தகராறு தற்கொலையில் முடிந்தது

கொழும்பு, மே 7

ஒரு பேனை தொடர்பாக அக்காவுக்கும் தம்பிக்கும் இடையே மூண்ட சண்டை தற்கொலையில் முடிந்தது.

இச் சம்பவம் வலஸ்முல்லையில் நடந்தது.

இருபது வயதான எஸ் ஏ பத்மா என்ற மாணவியே நஞ்சருந்தி தன் வாழ்க்கையை முடித்துக் கொண்டவராவார்.

இச் சம்பவம் தொடர்பான விசாரணை வலஸ்முல்லை மரண விசாரணை அதிகாரி வி ஏ ஜினதாசவின் முன்னிலையில் நடைபெற்றது. அங்கு காலஞ்சென்றவரின் தம்பி எஸ் ஏ கபில புஷ்ப குமார (வயது 17) சாட்சியமளித்தார்.

எம்மிடையே வாய்த்தர்க்கம் அடிதடியில் முடிந்த போது எமது தாயார் குறுக்கிட்டு காலஞ்சென்றவரைக் கண்டித்தார்.

கைத் தொடர்ந்த [illegible] மீதிருந்த கிருமிநாசினி மருந்தை அருந்தி விட்டு அவர் படுக்கையில் சாய்ந்தார்.

உப்புத் தண்ணீர் அவருக்குப் பருகக் கொடுக்க விட்டு வலஸ்முல்லை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றோம். அங்கு அவர் காலமானார்.

[illegible] சாட்சியத்தில் தெரிவித்தார்.

இவரது சாட்சியத்தை உறுதிப்படுத்தும் வகையில் காலஞ்சென்றவரின் தாயாரும் சாட்சியமளித்தார்.

இது தற்கொலை மரணம் என [illegible] (இ-ந-032)

## வங்கியின் மறதி காரணமாக

# தொலைபேசி இணைப்புகள் பல: துண்டிப்பு

கொழும்பு, மே 7

இலங்கை வங்கியின் "மறதி" காரணமாக ஐம்பதுக்கும் மேற்பட்ட தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

வாடிக்கையாளர்கள் தமது கட்டணப் பாக்கிகளைச் சரியான சமயத்தில் வங்கியில் செலுத்தியிருந்தும் கூட தனியார் ஆஸ்பத்திரி உட்பட பல வர்த்தக ஸ்தாபனங்களின் தொலைபேசி இணைப்புகளை தொலைத் தொடர்பு திணைக்களம் துண்டித்துள்ளது.

இதனால் பல முன்னணி வர்த்தகர்கள் தமது கட்டணங்களை திணைக்களத்திடம் நேரிடையாகச் செலுத்தாது மக்கள் வங்கிக் கிளைகளில் செலுத்தினால் போதும் என்று கடந்த மார்ச் மாதம் மேற்படி திணைக்களம் புதிய நடைமுறையொன்றை அமுலுக்குக் கொண்டு வந்தது.

பாக்கிக் கட்டணங்களைச் செலுத்தாத காரணத்தினால் நாடெங்கும் மூவாயிரத்துக்கும் அதிகமான தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

(இ-032)

# ஒழுக்க கோவை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வறுமையை ஒழிக்க முடியும். இந்தோனா உள்ளவர்களாக்க வேண்டும்.

70 லட்சம் பேர் இந்நாட்டில் உணவு முத்திரையில் வாழ்பவர்

தானத்தை, சகஜ நிலையை உருவாக்க முடியாமல் போய் விட்டது.

ஆனால் நாம் இன்று அங்கு சமாதானத்தை உருவாக்கி இருக்கிறோம். ஆயுதங்களால்

# வெங்காயம் விலை உயர்வு

கொழும்பு, மே 7

கொழும்பு, புறக்கோட்டை சந்தையில் சின்ன வெங்காயத்தின் விலை நேற்று கிலோவுக்கு 45 ரூபாவாக உயர்ந்திருந்தது.

சின்ன வெங்காயம் தட்டுப்

# தென் பகுதியில் மற்றுமொரு மேதின கூட்டம்

## எதிர் கட்சிகள் நடத்த உள்ளன

கொழும்பு, மே 7

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட பல பிரதான இடதுசாரி அரசியற் கட்சிகள் மற்றும் ஒரு மே தினக் கூட்டத்தை தென் பகுதியில் நடத்த தீர்மானித்துள்ளன.

இது தொடர்பாக பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

திவிநெகும திட்டத்தை எதிர்த்தல், வாழ்க்கைச் செலவைக் குறைத்தல், ஜனநாயகத்தை மீண்டும் நிலைபெறச் செய்தல் போன்றவற்றைக் கோரியே இந்த மே தினக் கூட்டம் வெசாக் கொண்டாட்டத்துக்குப் பின்னர் நடத்தப்படும்.

இடது சாரிக் கட்சிகள் பலவும் இந்த விடயமாகக் கூடி ஆராய்ந்துள்ளன.

ஸ்ரீ ல சு கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, லங்கா கம்யூனிஸ்ட் கட்சி, [illegible] கட்சி, தேச விமுக்தி ஜனதா கட்சி ஆகியவற்றின் தலைவர்கள் இப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றினர்.

நவலங்கா சமசமாஜக் கட்சி, [illegible] கட்சியின் தலைவர்களை [illegible] கொள்ளச் செய்யவும் ஏற்பாடு [illegible]

[illegible] மேதினக் கூட்டங்களை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(இ-007)

# நீர்கொழும்பில் சித்திரா பௌர்ணமி திருவிழா

நீர்கொழும்பு, மே 6

நீர்கொழும்பு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் நாளை பகல்கிழமை சித்திரா பௌர்ணமி 48 ஆவது ஆண்டு உபயத் திருவிழா சிறப்பாக நடைபெற உள்ளது.

காலை 8—30 மணிக்கு சங்காபிஷேகமும், மாலை 6—00 மணிக்கு மூலஸ்தான அலங்கார பூசைகளும் நடைபெறும்.

மாலை 6—30 மணிக்கு "சக்தி வழி பாடும் — வழிபாட்டு முறைகளும்" என்ற பொருளில் அருள்மொழி அரசி திருமதி [illegible]

இன்றைய சிந்தனை

இல்லை. அவர்களின் பிள்ளைக ளும, பேரன் பேத்திமார்களும இருக்கிறார்கள்.

இவர்கள் இந்த ஒப்பந்தத் திற்குக் கட்டுப்பட வேண்டியவர் களும அல்லர். அவர்கள் இன்று இந்த நாட்டையே தங்களது தாய் நாடாக, சொந்த நாடாக நினைத்து உழைத்து வருகின்றனர்.

அந்தத் தொழிலாளர்களை அரசாங்கம ஒப்பந்தம என்ற பெயரால் கட்டாயமாக நாடு கடத்தும செயல் சர்வதேச ரீதி யிலான மனித உரிமைக் கொள் கைக்கும, மனிதாபிமானத்திற் கும முரணான செயலாகும.

இலங்கை அரசாங்கம இந் திய கடவுச்சீட்டுப் பெற்ற 84,000 பேரையும அவர்களது

## 1991 ஆம் ஆண்டு போயா தினங்கள்

கொழும்பு, மே 7

அடுத்த ஆண்டு (1991)க் கான போயா தின விடுமுறை கள் பற்றி அரசாங்க வர்த்த மானியில் பிரசுரிக்கப்பட்டி ருக்கிறன.

பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல் கள் அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேரா இதனை அறிவித்துள் ளார்.

போயா விடுமுறை தின விவ ரங்கள் வருமாறு— 1991 ஆம ஆண்டு ஜனவரி மாதம 29 ஆம திகதி, நவம போயா தினம, பெப்ரவரி 28 ஆம திகதி. மெதின் போயா தினம மார்ச் 29 ஆம திகதி. பக் போயா தினம. — ஏப்ரல் 28 வெசாக் போயா தினம. மே 27 வெசாக் தினம. ஜூன் 26 பொசன் போயா தினம. ஜூலை 26 எசல போயா தினம. ஆகஸ்ட் 24 நிக்கினி போயா தினம,

செப்டம்பர் 23 பினா போயா தினம. அக்டோபர் 22 வப் போயா தினம. நவம்பர் 21 ஆம திகதி இல் போயா தினம. [illegible] 20 ஆம திகதி உந்துவப் போயா தினம—

(இ-வ).

[illegible] பனங்களின் தொலைபேசி இணைப்புகளை தொலைத் தொடர்பு திணைக்களம துண் டித்துள்ளது.

இதனால் பல முன்னணி வர் த்தக ஸ்தாபனங்கள், அடை உற்பத்தி நிறுவனங்கள், ஏற்ற மதி நிறுவனங்கள் பெரிதும பாதிக்கப்பட்டுள்ளன.

தொலைபேசி கட்டண பாக்கி களைச் செலுத்தாதோரின் தொலைபேசி இணைப்புகளைத் துண்டிக்க விடுவதென்ற [illegible] படி திணைக்களம தீர்மானித் தது. இதன் பேரில் பாக்கி வைத் திருப்போருக்கு நினைவூட்டும அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட் டன.

இதையடுத்து பாக்கி வைத் திருப்போர் இலங்கை வங்கிக் கிளைகளில் தொலைபேசி துண் டிப்பைத் தவிர்த்துக் கொள்ளும வகையில் கட்டணங்களைச் செலுத்தினர்.

ஆனால் மேற்படி வங்கி பாக்கி தொகைகளைச் செலுத்தியோ ரின் விவரங்களை தொலைத் தொடர்பு திணைக்களத்துக்குத் தெரிவிக்க மறந்து விட்டது.

இதையடுத்தே தாம பாக்கித் தொகைகளைச் செலுத்திய பின் னரும மேற்படி வாடிக்கையாளர் கள் தொலைபேசி கண்டிப்பை எதிர்நோக்க வேண்டிய கர்ப் பாக்கிய நிலைக்குள்ளாயினர்.

நீர்கொழும்பைச் சேர்ந்த தொழிற்சாலையொன்று பாக் கிக் கட்டணத்தைச் செலுத்திய பின்னர் தொலைபேசி துண்டிப் புக்கு [illegible]

[illegible] மாத ஏற்பட்டிருந் தாலேயே தொலைபேசி [illegible] [illegible] என்ற தொழிற் சாலை நிர்வாகத்தினரு முறையிட் [illegible] பின் [illegible] பாக் கிக் கட்டணம செலுத்தாத [illegible] கண்டிக்கப்பட் டது என்ற விளக்கமளிக்கப்பட் டது.

[illegible] தாம சரியாக [illegible] தொலைபேசி இணைப்பை [illegible] [illegible] பகார் [illegible]

தொலைபேசி உரிமையாளர்

(1 ஆம [illegible]) [illegible] வாமையை ஒழிக்க முடியும. இப்போதுள்ள உள்ளவர் களாக்க வேண்டும.

70 லட்சம பேர் இந்நாட்டில் உணவு முத்திரையில் வாழ்பவர் கள். இவர்களுக்கு வீட்டு வசதி கள் கட்டாயமாகத் தேவை.

இந்த நாட்டில் பலகாப்பட்ட இன மக்கள் வாழ்கிறார்கள் இவர்களுக்கு இடையில் சுபாதா னம, பரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டும். இதற்குக் கிராம எழுச்சிகள் வழிவகுக்கின்றன.

வடக்கு, கிழக்கில் பலம வாய் ந்த இராணுவம வந்தும சமா [illegible] வாக்க முடியாமல் போய் விட் டது.

ஆனால் நாம இன்று அங்கு சமாதானத்தை உருவாக்கி இருக்கிறோம். ஆயுதங்களால் அல்ல பேச்சுவார்த்தையின் மூலம.

எமக்கு அயுதங்களில் நம பிக்கையில்லை.

பேச்சுவார்த்தைகள் மூலம பிரச்சினைகளை தீர்க்கவே நாம விரும்புகிறோம.

இவ்வாறு ஜனாதிபதி கூறி னார்.

(ஊ-ழ)

## ஏனைய கட்சி...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

பிரிவினைவாதத்தைத் தடை செய்யும இந்த திருத்தத்தை நீக்குவதனால் பிரிவினை வாதம ஊக்குவிக்கப்படாது.

பிரிவினைக்கான உரிமையை அங்கீகரிப்பதன் மூலமே பிரிவினை அவசியமற்றது என்ற எண்ணத்தை சிறுபான்மை யினரின் மனதில் ஊட்டலாம.

இந்த அரசமைப்பு திருத்தம தான் பிரிவினையை ஊக்குவிக்கி றது.

எனவேதான் 6 ஆவது அரசமைப்பு திருத்தத்தை நீக்கு வதை நாம வலியுறுத்துகி றோம.

இந்த விடயத்தில் கடந்த வாரம நாம பல இடதுசாரி கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினோம.

எவரினதும ஏஜன்டுகளாக எவரையும திருப்திப்படுத்த வதை நோக்கமாக கொள்ளா மல் இன ஐக்கியத்திற்கான உண்மையான தேவையின் கார ணமாகவே நாம இந்த முயற்சி யில் ஈடுபட்டு வருகிறோம.

இப்படி திரு கந்தசாமி தெரி வித்தார்.

(ஊ-ற)

## 100 கிராம் பாண்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

படும.

இத்தகவலை உணவு கூட்டுற வுத் துறை அமைச்சர் திரு வீர சிங்க மல்லிமாராச்சி தெரிவித் தார்.

பொரளையிலுள்ள விற்பனை திணைக்கள பேக்கரியில் இந்த பாண் தயாரிக்கப்படும.

இந்தப் பாண் கூட்டுறவு சங் கக் கடைகள் மூலமும தனியார் துறையினரின் ஒத்துழைப்புடனும கொழும்பு நகரில் முதன் முதலாக விற்பனைக்கு விடப்படும.

விற்பனையாளர்களுக்கு உண வுத் திணைக்களம 10 சத வீத கழிவை வழங்கும.

கொழும்பு தெற்கு கூட்டுற வுச் சங்கம, கொலன்னாவை கூட்டுறவுச் சங்கம, மற்றும பல கூட்டுறவுச் சங்கங்களிலும இந்த பாணை விற்பனை செய்ய மாறு அமைச்சர் மல்லிமாராச்சி பணிப்புரை விடுத்திருக்கிறார்.

(ஊ-வ)

## கழுத்து...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் பொது மக்களின் ஒத்துழைப்பை நாடியுள்ளனர்.

இளம நீல நிறமும மண் நிற மும கொண்ட கோடு போட்ட சாரமும, இளம சிவப்பு நிற அரைக்கை சேர்ட்டும அணிந்து சடலம காணப்பட்டது.

(ஊ-வ)

கொழும்பு, புறக்கோட்டை சந்தையில் சின்ன வெங்காயத் தின் விலை நேற்று கிலோவுக்கு 45 ரூபாவாக உயர்ந்திருந்தது.

சின்ன வெங்காயம தட்டுப் பாடே விலை ஏற்றத்திற்குக் கார ணம என்று தெரிகிறது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் வெங்காய லொறிகளில் இருந்து ஆயுதக் குழுக்கள் பணம் வசூலித்து வருவதால் பல வர்த்த கர்கள் கொழும்புக்கு வெங்கா யம் ஏற்றி வராததே இந்தத் தட் டுப்பாட்டுக்குக் காரணம என்று புறக்கோட்டை வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

[ஊ—ற]

க்கு மூலஸ்தான அலங்கார பூசை களும நடைபெறும.

மாலை 6-30 மணிக்கு "சக்தி வழி பாடு - வழிபாட்டு முறைகளும" என்ற பொருளில் "அருள்மொழி அரசி விக்கவான்" திருமதி வசந்தா வைத்தியநாதன் சொற்பொழிவு ஆற்றுவார்.

இதன் பின் வசந்த மண்டப அலங்கார பூஜைகளும தொடர் ந்து சிறு உலாவும நடைபெறும.

இச் சிறப்பு [illegible] [illegible] [illegible] சி பத்மநாபன் செட்டியார் தலைமையில் நடைபெறும.

(இ-ங)

## சாம் தம்பிமுத்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

கடத்தப்பட்டு இரண்டு தினங் களின் பின்னர் விடுதலை செய்யப் பட்டார். திரு சாமதம்பி முத்துக்கு 14 வயதில் மகன் ஒரு வர் இருக்கிறார்.

இதேவேளை தாக்குதல் படை ஒன்று கொழும்பு வந்திருப் பதாகவும, தமிழ் எம.பிக்கள் மிகவும எச்சரிக்கையாக இருக்க வேண்டும என்றும இரு தினங்களுக்கு முன் அரசு எச்ச ரிக்கை விடுத்திருந்தது என அறிய வருகிறது.

(ஊ-மு)

## பிச்சைக்காரர்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

களுக்கு கல்வி வசதிகள் செய்து கொடுக்கப்படும.

இதேவேளை கண்டி, கதிர் காமம அனுராதபுரம ஆகிய பகுதிகளிலுள்ள பிச்சைக்காரர் கள் சில வாரங்களுக்குள் கைது செய்யப்படுவர்.

இலங்கையில் பிச்சைக்காரர் களற்ற சமூகம ஒன்றை ஏற்படுத் தும நோக்கத்துடனேயே இத் திட்டம செயல்படுத்தப்படுகிறது.

பிடிக்கப்படும பிச்சைக்காரர் களிடையே அநாதரவான வயோ திபர்கள் இருந்தால் அவர்கள் முதியோர் இல்லங்களில் வைத்து பராமரிக்கப்படுவர். (ஊ-வ).

## வடபகுதி சூறா...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

நோக்கி முன்னேறி வந்த இந்த சூறாவளி பின்னர் தென் இந்தி யாவை நோக்கி திசை மாறியது என வானிலை அவதான நிலையம தெரிவித்தது.

சூறாவளி திசை மாறிச் சென் றாலும் அடுத்த 24 மணித்தியாலத் திற்கு யாழ்ப்பாணம, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் காலநிலை சீரற்று இருக்கும் என அறிவிக்கப்படுகி றது.

[ஊ—மு]

## நியமனம்

காலி - கிந்தோட்டை முஹி யித்தீன் ஜும்மஆப் பள்ளிவாசல் கதீபாக மௌலவி கியாஸ்தீன் (பத்தாஹி) நியமனம பெற்றுள் ளார். மௌலவி முனீர் (அருஸி) கிந்தோட்டை மீரான் ஜும்மஆப் பள்ளிவாசலின் கதீப் ஆக நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஊ-034)

## இன்றைய திரைகளில்

4 வது வாரம

மஜெஸ்டிக்

[கிராண்ட்பாஸ்]

2-00. 6-00, 9-30

ரியோ

[கொமபனித்தெரு]

(குளிரூட்டப்பட்டது)

கடைசி வாரம

திங்கள் முதல் வியாழன் வரை,

காட்சி நேரங்கள்

2-15, 6-00, 9-00 மணி

வெள்ளி/சனி/ஞாயிறு

10-15, 2-15, 6-00, 9-00

வின்சர்

[யாழ்நகர்]

10-30, 2-30, 6-00

பாக்யராஜ் — ஷோபனா

சோமயாஜுலு — மனோரமா

குமரிமுத்து நடித்த

**இது நம்ம ஆளு**

[கலர்]

5 வது வாரம

சமந்தா

(தெமட்டகொடை)

10-00, 2-00, 6-00, 9-30

கொன்கோட்

(தெகிவளை)

10-30, 2-00, 6-00, 9-00

ஸ்ரீதர்

(யாழ்நகர்)

10-30 2-30, 6-30

ரஜனிகாந்த் — ராதிகா

நடித்த

சத்யா மூவீஸ்

**ஊர்க்காவலன்**

(கலர்)

# ரசிகர்களின் ரசனைகள்

## ஊருக்கு ஊரு மாறுபட்டிருக்கும்

### டைரக்டர் கஜேந்திரன் கூறுகிறார்

துள்ளி எழும காலைப் பொழுதில் பல்லழகி பல்லவி சொல்லழகில் தொடுத்த சில கேள்விக் கணைகளுக்கு, கலையுலக டைரக்டர் கஜேந்திரன் கொடுத்த பதில்கள் இதோ—

உங்கள் படம் விசு படம் போல் உள்ளது என்கிறார்களே

அதை நான் பெருமையாக கருதுகிறேன் பல்லவி. நான் இது



பல்லவி

வரை 8 படங்களை இயக்கி இருக்கிறேன்.

இதில் 5 படங்கள் வெற்றிப் படங்கள். 3 படங்கள் சராசரி படங்கள். நான் இத்தனை படங்கள் இயக்கி இருந்தாலும என்னை இன்னும "வீடு மனைவி மக்கள்" விசு கண்ணோட்டத்தில்தான் பார்க்கிறார்கள்.

"ஒரு குழந்தை பிறக்கிறது. பிறக்கிற குழந்தை தந்தையைப் போல் இருக்கிறது என்றால் தான் தந்தைக்குப் பெருமை. நானும அது போல்தான். விசுவைப் போல் டைரக்ஷன் இருக்கிறது என்றால் அது அவருக்கும பெருமை. எனக்கும மகிழ்ச்சி.

இருந்தாலும தொடர்ந்து அவரது பாணியிலேயே இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் ராமராஜன், பிரபு, கார்த்திக்கை வைத்து மாறுபாடான கதைகளையும கொடுத்து வெற்றி பெற்று இருக்கிறேன்.

அதுபோல் உங்களை "சின்ன பட்ஜெட் படங்களின் டைரக்டர்" என்று கூறுகிறார்களே... அது உங்களை பாதிக்காதா?

நான் சின்ன பட்ஜெட் டைரக்டர்தான். சிக்கனத்தை

சமோ லாபம சமபாதித்துக் கொடுப்பதில்தான் எனக்கு விருப்பம அதிகம.

குறைந்த பட்ஜெட்டில் நிறைவான படம இதுதான் என் குறிக்கோள். இதைத்தான் நான் செய்து கொண்டு இருக்கிறேன். இனிமேலும அதைத்தான் செய்வேன்.

குறைந்த பட்ஜெட்டில் படம எடுப்பதால் எனக்கு பாதிப்பு உண்டா என்று கேட்டால் 2 பாதிப்பு உண்டு. முன்னணி நடிகர்கள் என் படஙகளில் நடிக்குமபோது லேசாக முணக் கஷ்டம படுவது உண்டு.

காரணம என் படஙகளில் விலை உயர்ந்த உடைகளோ, பிரமாண்டமான செட்டுகளோ இல்லாததால் "என்ன சார் இவ்வளவுதானா?" என தமாஷாக கூறுவார்கள்.

அடுத்து என் படஙகள் நன்றாகவே ஓடி இருக்கும. ஆனால் தயாரிப்பாளர்கள் வந்து, "சிக்கனம சிக்கனமனு டைரக்டர் படத்தை எடுத்திட்டாரு. இன்னும செலவு பண்ணி "ரிச்"சாக எடுத்திருந்தா படம இன்னும நன்றாகவே ஓடி இருக்கும" என்று படத்தின் வெற்றி தோல்வியை என் தலையில் போட்டு விடுவார்கள்.

அதோடு இன்னொன்று. இப்போது மக்களின் ரசனையைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. சென்னையில் நன்றாக ஓடிய படம மதுரையில் நன்றாக ஓட மறுக்கிறது.

மதுரையில் வரவேற்பு பெற்ற படம கன்னியாகுமரியில் காணாமல் போய் விடுகிறது.

இப்படி மக்களின் ரசனை ஊருக்கு ஊரு வித்தியாசமாக இருப்பதால் எந்த படம எப்படி ஓடும என்பதை கணிக்க முடியவில்லை. பயமாக இருக்கிறது.

வித்தியாசமாக – ஆடமபர



கஜேந்திரன்

மாக செலவு செய்து படம தோல்வி அடைந்து பலத்த அடி வாங்கி காணாமல் போய் விடுவதைவிட, குடுமபப் பாஙகான படஙகளைக் கொடுத்து, கொஞ்சம கொஞ்சமாக லாபம சமபாதித்து முன்னேறலாம. இதுதான் என் பாணி.

கஜேந்திரன் இவ்வாறு கூறினார்.

(இ-10)



# குழந்தைவிற்பனை:

## உடனடியாக

## தடுக்க பணிப்பு

கொழும்பு மே 7

வெளிநாட்டவர்களுக்கு குழந்தைகளை விற்பனை செய்வதை உடனடியாக தடுக்க வேண்டும—

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச இவ்வாறு பணிப்புரை விடுத்துள்ளார்—

தத்தெடுக்கும் குழந்தை ஒன்று வளர்ப்புப் பெற்றோரால் பாதிக்கப்படலாம என சிறுவர் பராமரிப்பு நன்னடத்தை ஆணையாளர் மேல் நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்தால் அக் குழந்தையை தத்தெடுக்க அனுமதி வழஙகக் கூடாது—

குழந்தை ஒன்றை தத்தெடுக்கும வளர்ப்புப் பெற்றோர் பொருளாதார ரீதியாக பாதிக்கப்படும பொழுது அக்குழந்தையும பாதிக்கப்படலாம—

சிறுவர் பராமரிப்பு ... நன்னடத்தை ஆணையாளர் மேல் நீதிமன்றத்தில் முறையிட்டதன் பின் மேல் நீதிமன்றம தத்தெடுக்கும உரிமையை ரத்துச் செய்யும—

வெளிநாட்டவர்களுக்கு குழந்தைகளை விற்பதை உடனடியாக தடுப்பதற்காகவே மேற்படி பணிப்புரை அவசரகால சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது

இவ்விசேட பணிப்புரை அரசவர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது—

அதிகாரம பெற்ற அல்லது அரசுக்கு சொந்தமான சிறுவர் பராமரிப்பு நிலையஙகளைத் தவிர்ந்த ஏனைய தனியார் பராமரிப்பு நிலையஙகளில் இருந்து குழந்தைகளை வெளிநாட்டவர்களுக்கு கொடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது—

1988 ஜூலை மாதம அமைச்சரவை கூட்டத்தில் இதற்கான தீர்மானமும எடுக்கப்பட்டிருக்கிறது—


இத்தீர்மானத்துடன் புதிய சட்டவரைவினை நாடாளுமன்றத்தில் கொண்டுவருமவரை சிறுவர் பராமரிப்பு நன்னடத்தை ஆணையாளர் மேல் நீதிமன்றத்தில் இது தொடர்பான பிரச்சினைகளுக்குச் சமூகமளிக்க வகை செய்யப்படும—

தத்தெடுக்க விண்ணப்பிப்பவர் குழந்தைக்கு சிறந்த கல்வி, சுகாதாரம ஆகியவற்றை வழஙகக் கூடியவராகவும ஒழுஙகாகவும சீராகவும வளர்ப்பதற்குத் தகுதியுடையவராகவும இருக்க வேண்டும—

சிறுவர் பராமரிப்பு நன்னடத்தை ஆணையாளர் இவற்றை உறுதிப்படுத்திய பின்பே மேல் நீதிமன்றம் தத்தெடுப்பதற்கான உத்தரவை வழஙகும—

மறுவாழ்வு, மறுசீரமைப்பு சமூக நல அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்—

(நு-ழ)



### தேநீர் விருந்து உபசாரம்

ஈரான் இஸ்லாமியக் குடியரசிலிருந்து புனித ரமழானில் கிராஅத் ஓத இலஙகை வந்திருந்த காரிகளுக்கு இலஙகை பைத்துல் முகத்தஸ் செயல் முன்னணியின் தலைவர் அல்ஹாஜ் பீ எம எம யூசுப் தேநீர் விருந்தளித்த போது பிடிக்கப்பட்ட படம.

படத்தில் ஈரான் காரிகளுடன் யூசுப்பும காணப்படுகின்றார்.

[ஏ எல் எம அஸ்வர்]

(இ-248)

## பல்லாங்கொடை வாசிகசாலையில் தமிழ்நூல் இல்லை

பலாஙகொடை மே 6

பலாஙகொடை நகர சபை வாசிகசாலையில் எந்தவித தமிழ் நூல்களும சஞ்சிகைகளும இல்லை. இதனால் இப்பகுதியிலுள்ள தமிழ் பேசும பொது மக்கள் பெரும அதிருப்தியும கவலையும அடைந்துள்ளனர்.

பலாஙகொடைப் பகுதியிலே தமிழ் முஸ்லிம பாடசாலைகள் பல இருக்கின்றன, இப்பாடசாலைகளில் கல்வி பயிலும உயர் வகுப்பு மாணவர்களுக்கு இதனால் இந்த வாசிகசாலையில் எந்தவித பயனையும பெற முடியாதுள்ளது—

மலையகப் பகுதியான பலாஙகொடை பகுதியில் பெருவாரியான தமிழ் பேசும மக்கள் வாழ்வதால் பலாஙகொடை நகரசபை வாசிகசாலையில் தமிழ் நூல்களையும சஞ்சிகைகளையும வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும.

நகரசபை இந்த விடயத்தில் கூடிய கவனம செலுத்தி தமிழ் நூல்களை வரவழைத்து வாசிகசாலையில் வைத்து தமிழ் பேசும மக்களின் குறையினைத் தீர்க்க வேண்டும.

இலஙகை தேசிய தோட்டத் தொழிலாளர் சஙகத்தின் பாலஙகொடைப் பகுதி பிரதிநிதி இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

[இ—038]

## பெட்ரோலிய கூட்டுத்தாபனத்திற்கு

## ரயில்வே திணைக்களம் ரூ. 9 கோடி நிலுவை

கொழுமபு மே 6

இலஙகை ரயில்வே திணைக்கள பெட்ரோலிய ... திறைசேரியிலிருந்து மானியம வழஙகுவதில் தாமதம

## கண்டி – அம்பதென்ன


டார் என்று கூறுகிறார்களே... அது உங்களை பாதிக்காதா?

நான் சின்ன பட்ஜெட் டைரக்டர்தான். சிக்கனத்தை கடைப்பிடிப்பவன்தான். ஒப்புக் கொள்கிறேன். அதில் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

பிரமிப்பு ஊட்டும் "செட்"டுகள், பத்து இருபது பேரை வைத்து தேவை இல்லாத சண்டைக் காட்சிகள், ஆடம்பரமான உடைகள் இது எனக்கு தேவை இல்லை. அதனால் பணம்தான் அதிகம் செலவாகிறது.

நான் அதில்தான் சிக்கனத்தை கடைப்பிடிக்கிறேனே தவிர சிறந்த படங்களை கொடுப்பதில் இல்லையே...

ரூ 1 கோடி செலவு செய்து 20 லட்சம் லாபம் தேடிக் கொடுப்பது எனக்குப் பிடிக்காது. 30 லட்சம் செலவு செய்து அதில் பத்தோ, பதினைந்து லட்ச



விழிகளில் உரையாட மொழி தேவையில்லை! உடலோடு உறவாட இது நேரமில்லை! அதனால்தான் இவர்கள் எல்லைகள் மீறாமல் இருக்க உடலை மட்டும் திருப்பிக் கொண்டிருக்கின்றனரோ? [சுமன் — பானுப்பிரியா]

[படம்: "ஒரு கிராமத்துக் குயில்"]

[இ—10]

## வரவேற்பு விழாவில் ரமாவுக்கு அடி, உதை

குயில் குப்பத்தில் உள்ள ரிக்ஷாக்கார தருமன் பொதுக் கட்சியின் தீவிர தொண்டன்—

அந்தத் தொகுதியில் தேர்தல் நடைபெறுகிறது— பொதுக் கட்சி சார்பில் நடிகர் பொன்வண்ணன் போட்டியிடுகிறார்—

வேட்பாளர் பொன்வண்ணன் ஓட்டுக் கேட்டு குயில் குப்பத்துக்கு வருகிறான்—

பொதுக் கட்சியில் ஈடுபாடு உள்ள டில்லி பாபு பிரமாண்டமான வரவேற்பு விழாவுக்கு ஏற்பாடு செய்கிறான்—

தீவிர தொண்டனான தருமன் தனது மனைவி சிட்டுவுடன் விழாவுக்கு வருகிறான்— பொன்வண்ணனுக்கு தனது மனைவியை ஆரத்தி எடுக்கச் சொல்கிறான்—

ஆத்திரமடைந்த தருமன் "என்ன தைரியம் இருந்தால் இப்படிச் செய்வே? நீ எந்தக் கட்சி என்று தெரியாமல் கல்யாணம் பண்ணினது தப்பா போச்சு" என்று கூறி சிட்டுவை அடித்து உதைக்கிறான்—

சிட்டு, பொன்வண்ணனுக்கு ஆரத்தி எடுக்கும் போது அவனைப் பார்த்து அதிர்ச்சி அடைந்து கற்பூர ஆரத்தியை கீழே போட்டு விடுகிறாள்—

இப்படி ஒரு காட்சி பாரதி ராஜாவின் "என் உயிர்த் தோழன்" படத்தில் இடம்பெறுகிறது—

பொன்வண்ணனாக புதுமுகம் தென்னவனும் தருமனாக புதுமுகம் பாபுவும் சிட்டுவாக புதுமுகம் ரமாவும் டில்லிபாபுவாக லிவிங்ஸ்டனும் நடித்தார்கள்—

மற்றும் சார்லி, எம் எல் ஏ மல்லையா, வடிவுக்கரசி, சத்யா ஆகியோரும் இந்தப் படத்தில் நடிக்கிறார்கள்—

கண்ணன் ஒளிப்பதிவு செய்ய, இளையராஜா இசை அமைக்கிறார்—

கதை வசனத்தை கலைமணி எழுதியிருக்கிறார்—

பாரதிராஜா திரைக்கதை அமைத்து டைரக்ட் செய்கிறார்—

[ல—10]

### தினபதி சினிமா

பலாங்கொடை பகுதி

[இ—038]

## கண்டி – அம்பதென்னை பஸ் சேவை சீர்கேடு

அக்குறணை மே 6

கண்டியிலிருந்து அம்பதென்னை ஊடாக செல்மை, அங்கும்புறை, கல்ஹின்னை ஹல்கொல்ல போன்ற பகுதிகளுக்குச் செல்லும் மத்திய போக்குவரத்து சபையின் பஸ் சேவைகள் சீரற்ற நிலையில் இருப்பது குறித்து இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஹல்கொல்லயிலிருந்து குருநாகலைக்குச் சேவையில் ஈடுபட்டிருந்த போக்குவரத்து சபை பஸ்கள் கடந்த கால கலவரங்களின் போது எரிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து இன்று வரை இப்பஸ் சேவை ஆரம்பிக்கப்படவில்லை. இதேநேரம் ஹல்கொல்லையில் இருந்து மாத்தளை செல்லும் சேவையும் சீரற்ற நிலையில் உள்ளது.

இப்பகுதிக்கு கண்டியிலிருந்தும், மாத்தளையிலிருந்தும் இன்னும் மேலதிக பஸ் சேவைகளை ஆரம்பிக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(இ-411)

## இந். துணைப்பிரதமர் குணமடைந்து வருகிறார்

கொழும்பு, மே 6

சுகயீனமுற்று ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ள இந்திய துணை பிரதமர் திரு தேவிலால் தற்போது குணமடைந்து வருகிறார்— இதனை அகில இந்திய வானொலி அறிவித்தது—

அவர் புதுடில்லியில் உள்ள ராம் மனோஹர் லோதியா ஆஸ்பத்திரியில் கடந்த வெள்ளிக்கிழமை சேர்க்கப்பட்டார்—

[இ-ஜூ]

## ...9 கோடி நிலுவை

கொழும்பு மே 6

இலங்கை ரயில்வே திணைக்களம் பெட்ரோலிய கூட்டுத்தாபனத்திற்கு 9 கோடியே 30 லட்சம் ரூபாவை நிலுவையாக வைத்துள்ளது:

இந்நிலுவையைக் கூடிய விரைவில், செலுத்த வேண்டும். இல்லாவிடின் பெற்றோல் விநியோகம் நிறுத்தப்படும் என பெட்ரோலிய கூட்டுத்தாபனம் எச்சரித்துள்ளது.

திறைசேரியிலிருந்து மானியம் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதால் இந்நிலுவையை உடனடியாக செலுத்த முடியாது என்று ரயில்வே திணைக்களம் கூறியுள்ளது:

கடந்த 3 வருடங்களில் புகையிரதத் திணைக்களம் 100 கோடி ரூபாவை இழந்துள்ளது.

இதனால் ரயில்வே திணைக்களத்திற்கு லாபமில்லை. இந்த நட்டத்தை திறைசேரி மானியம் மூலமாகவே வழங்கி வருகிறது.

ரயில்வே திணைக்களம், 50 கோடி ரூபாவை திறைசேரியிடமிருந்து கேட்டுள்ளது.

இதற்கு இதுவரையிலும் பதில் இல்லை என்றும் ரயில்வே திணைக்களம் கூறியுள்ளது.

(இ-455)

## இஸ்மாயிலைப் போட்டியின்றி நாடாளுமன்றத்திற்கு அனுப்பிய பெருமை புத்தளத்திற்கே —அஸ்வர்

புத்தளம் மே 5

இலங்கை நாடாளுமன்ற தேர்தல் வரலாற்றிலேயே முதன் முறையாக மர்ஹூம் எச் எஸ் இஸ்மாயிலை, (முன்னாள் சபாநாயகர்) போட்டியின்றி நாடாளுமன்றம் அனுப்பி வைத்த பெருமை புத்தளம் தொகுதிக்கு உண்டு.

முஸ்லிம் சமய கலாசார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ. எச் எம் அஸ்வர் இவ்வாறு புகழாரம் சூட்டினார்.

புத்தளம் தொகுதியிலுள்ள ஐ தே கட்சியினால் கிளைகளது கருத்தரங்கொன்று அண்மையில் புத்தளம் நகர மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கின் போது பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போது ஜனாப அஸ்வர் மேற்கண்டவாறு தெரிவித்தார்—

புத்தளம் நகர சபைத் தலைவர் அல்ஹாஜ் எம ஐ பிஸ்ருல் ஹாபி இக்கருத்தரங்கிற்கு தலைமை தாங்கினார்—

ஜனாப் அஸ்வர் தனது உரையில் மேலும் கூறியதாவது:

"மர்ஹூம் எச் எஸ் இஸ்மாயிலுக்குப் பிறகு புத்தளத் தொகுதிக்கு சேவையாற்ற முன்னாள் நிதியமைச்சர் அல்ஹாஜ் எம எம எச் எம நைனா மரைக்கார் காலத்திலும் புத்தளம் தொகுதி வெகுவாக அபிவிருத்தியடைந்து வந்தது.

அவரின் அடிச் சுவட்டில் இன்று நான் உங்கள் முன் சேவை புரிய நியமிக்கப்பட்டுள்ளேன்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலையடுத்து புத்தளத் தொகுதி சிறுபான்மை மக்கள் தமது நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை இழந்தனர்.

புத்தளத் தொகுதி மக்களின் நலன்களை கவனிக்க ஒரு பிரதிநிதி தேவை என உணர்ந்த ஜனாதிபதி என்னை நியமனம் செய்துள்ளார்.

அதன்படி உங்களுக்கும், உங்கள் தொகுதிக்கும் சேவை புரிய எனக்கோர் சந்தர்ப்பம் கிட்டி உள்ளது.

எனக்குப் பொது மக்களும், கழக உறுப்பினர்களும் பூரண ஒத்துழைப்புக் கொடுத்தால் எனது பணி சுலபமாகி விடும் எனக் கூறினார்.

(இ-241)

## மாத்தளையில் கொள்ளை சம்பவங்கள்

தெல்தெனிய மே 5

மாத்தளையைச் சேர்ந்த உக்குவளைப் பகுதியில் கொள்ளைச் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

மாருகோனா, மானம்பொட, மாபேரி ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளுக்குள் இனந்தெரியாத கோஷ்டியினர் ஆயுதங்களுடன் புகுந்து வீட்டில் இருப்பவர்களை அச்சுறுத்தி கொள்ளையடித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

(ல-289)

தினபதி
தந்தி "தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல- 1613

சுடர் 18 கதிர் 4478
— 1990 மே 8 —

# சிறிய நோய்க்கும் ஏன் மருந்து தேட வேண்டும்?

## உடலுக்கு அவை தீங்கு தரலாம் என சர்வதேச நிறுவனம் எச்சரிக்கை

தடிமன் இருமல் நோய் மனிதரைப் பெரிதும் வாட்டி யெடுத்து விடுகின்றன.

காற்றில் காணப்படும் வைரசுகள் எமது உடலின் நோய் எதிர்ப்பு ஆற்றல் பலவீனமுற்றிருக்கும் சமயத்தைப் பயன்படுத்தி உடலில் புகுந்து தடிமனைத் தோற்றுவித்து விடுகின்றன.

அரசாங்க ஆஸ்பத்திரிகளையும் சின்னச் சின்ன மருத்துவ நிலையங்களையும் நாடிவரும் நோயாளர்களில் பெரும்பான்மையினர் சளி, தடிமன் என்ற எளிய மருத்துவத் தேவையில்லாத நோயால் பீடிக்கப்பட்டவர்களே!

தடிமனால் ஒருவர் பீடிக்கப்பட்டால் அவர் செய்ய வேண்டியதெல்லாம் வெளியில் அலையாது வீட்டில் தங்கி ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டியதே! கொத்தமல்லி நீரைப் பருகி அஸ்பிரினை எடுத்துக் கொண்டால் இரண்டொரு தினங்களில் தடிமன் தானாகவே விட்டுவிடும்.

ஆனாலும் மருத்துவம் செய்து கொண்டால்தான் நோய் தீருமென்பது உலகெங்கும் உள்ள பெரும்பாலான மக்களின் உறுதியான நம்பிக்கையாக இருந்து வருவதால் இந்த பலவீனத்தைப் பயன்படுத்தி பல மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் தடிமனுக்கும் இருமலுக்கும் பல்வேறு மருந்துகளைத் தயாரித்து பலகோடி ரூபாவுக்கு வியாபாரம் செய்து வருகின்றன.

இந்தத் தடிமன் எவ்வாறானவை என்பதை சர்வதேச சுகாதார நடவடிக்கை அமைப்பு என்ற நிறுவனம் சமீபத்தில் ஆராய்ந்தது. உலகின் பன்னிரண்டு பிரதேசங்களில் விற்பனைக்கு விடப்பட்டிருக்கும் இம்மருந்துகளை ஆராய்ந்து பார்த்த இந்நிறுவனம் உடலுக்கு நன்மையை விட தீமையை தினங்களில் தடிமன் தானாகவே விளைவிக்கக் கூடிய அம்சங்களே இவற்றில் அடங்கியிருப்பதாகக் கண்டுபிடித்துள்ளது.

அமெரிக்க மருத்துவ கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் இவ்வகை மருந்துகளில் மூன்று அடிப்படை மருத்துவ பொருட்களே கலக்கப்பட்டிருக்க வேண்டும், ஆனால் இந்த அமைப்பு பரிசோதனைக்கு உட்படுத்திய சில மருந்துகளில் மூன்றுக்கும் மேற்பட்ட மருந்துப் பொருட்கள் அலக்கப்பட்டிருந்தனவாம், வேறு சில மருந்துகளில் மூன்று மருத்துவ பொருட்கள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அவை ஒன்றுக்கு ஒன்று முரணான தன்மைகளைக் கொண்டவையாகக் காணப்பட்டனவாம்!

அதாவது நோய் தற்காலிகமாகக் குணமானாலும் கூட, மருந்துப் பொருட்களின் முரணான போக்குக் காரணமாக நோய் சீக்கிரமே மறுபடி கிளர்ந்தெழுந்துவிடும்.

சில மருந்துகளில் மூக்கில் நீர் வடிதலை நிறுத்தும் மருத்துவப் பொருள் சேர்க்கப்பட்டுள்ளன. மூக்கில் நீர் வடிதலை நிறுத்த வேண்டிய அவசியம் இல்லை. ஆனாலும் நீர் வடிதலை இம்மருந்து தற்காலிகமாக நிறுத்துவது உண்மையானாலும் பின்னர் மூக்கில் நீர் வடிவது மீண்டும் உக்கிரமாக நடைபெற ஆரம்பித்தது விடுகிறதாம்!

சில மருந்துகளில் காணப்படும் பொருட்கள் அந்த நேரத்தில் நோயாளிக்கு நிவாரணம் அளித்தாலும் தடிமனை மறைமுகமாக அவை தூண்டியும் விடுகின்றன என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இப்படித் தடிமன் மருந்துகள் தொடர்பாகப் பல உண்மைகளை வெளியிட்டுள்ள மேற்படி அமைப்பு, தத்தமது நாடுகளில் விற்பனைக்கு விடப்பட்டிருக்கும் இருமல் - தடிமன் மருந்துகளை அந்நாட்டு அரசாங்கங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது.

கவர்ச்சியான உறுதிமொழிகளைத் தெரிவிக்கும் இந்த விலை மிகுந்த மருந்துகளின் உதவியின்றி இருமல் - தடிமனைக் குணமாக்கிவிட முடியும் என்பதை அடிமட்ட மக்களும் உணர்ந்துகொள்ளும் வகையில் சுகாதார அமைப்புக்கள் மக்களிடையே பிரசாரம் செய்ய வேண்டும்.

நோய் வந்தால் மருந்து அருந்த வேண்டும் என்ற தப்பபிப்பிராயத்தை முறையான அறிவூட்டலின் மூலம் மக்களிடம் இருந்து களைய வேண்டும்!

[ம—032]

## சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு

சமீபத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட சுற்றுப்புற சூழல் அமைச்சு குறுகிய காலத்திற்குள்ளேயே கணிசமான முன்னேற்றங்களைக் கண்டிருக்கிறது. சூழலைக் காப்பதில் அரசும உறுதியாக இருக்கிறது.

சுற்றுப்புற சூழல் அமைச்சு சரியான பாதையில் செயல்படுகிறது என்பதை முக்கிய மூன்று விவகாரங்களில் அரசு எடுத்த முடிவுகள் புலப்படுத்துகின்றன.

தோல் பதனிடும் ஐந்து தொழிற்சாலைகள் சுகாதாரத்திற்கு கேடாகவும் சூழலுக்குப் பாதகமாகவும் நகர் புறத்தில் இயங்கி வந்தன.

இவற்றுக்கு எதிராக அரசு சார்பற்ற தொண்டர் அமைப்பான சூழல் பாதுகாப்பு மன்றம் சட்ட நடவடிக்கை எடுத்து ஓரளவு வெற்றியும் கண்டது.

இருப்பினும் அந்தத் தொழிற்சாலைகள் நீதிமன்ற உத்தரவுக்கு பணிந்து போகத் தவறின. அப்பகுதி மக்கள் தொடர்ந்தும் அசௌகரியத்தை அனுபவித்தனர்.

இந்தக் கட்டத்தில் சுற்றுப்புற சூழல் அமைச்சு செயலில் இறங்கியது. இந்த தொழிற்சாலைகளை வேறு இடத்திற்கு கொண்டு சென்று விட வேண்டும் என உறுதியான முடிவை எடுத்தது.

கொழும்புத் துறைமுகத்தில் இரண்டு வருட காலமாக இழுபறிப்பட்ட இரசாயன கழிவுப் பொருள் விவகாரத்திலும் அமைச்சு இதேவிதமாக செயலில் இறங்கியிருக்கிறது.

## மூதூரில் நெல் கொள்வனவு

மூதூர் மே 6

நெல் சந்தைப்படுத்தும் சபையின் மூதூர் களஞ்சியத்தில் நெல் கொள்வனவு செய்யப்படுகிறது.

இங்கு கொள்வனவு செய்யப்படும் நெல்லுக்கு உடனுக்குடன் பணம் வழங்கப்படுகிறது. இதனால் விவசாயிகள் இங்கேயே நெல்லை விற்பனை செய்கின்றனர்.

[இ—491]

## வேறுபாடுகளை மறந்து முஸ்லிம்கள் ஒன்றுபட வேண்டும்

### பிரதம இமாம் அறிவுரை

தெல்தெனிய மே 6

இஸ்லாம ஒற்றுமையை வலியுறுத்தும் ஒரு மார்க்கமாகும். எனவே முஸ்லிம்கள் அனைவரும் தமக்கிடையேயுள்ள கட்சி வேறுபாடுகளையும் பிளவுகளையும் மறந்து ஒன்றுபட வேண்டும்,

இவ்வாறு கண்டி மீராமக்கும பள்ளிவாசல் பிரதம இமாம் அல்ஹாஜ் மௌலவி ஐ எல் எம இப்றாகீம (பலாஹி) தெரிவித்தார்.

பெருநாள் தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற விசேட உரையின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் சொன்னதாவது—

ஒரு மாத காலம் அதாவது புனித ரமழானில் பயின்ற ஆத்மீகப் பயிற்சி மூலம் நமது வாழ்வை சீராக அமைக்க வேண்டும். ஏக இறைவனுக்காக நாம பசித்திருந்தோம. விழித்திருந்தோம. நமது ஆசைகளைத் தியாகம செய்தோம. அந்த உணர்வுகள் எம வாழ்வில் பிரதிபலிக்க வேண்டும்.

நாம் பள்ளிவாசலில் தோளோடு தோள் நின்று உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்று வித்தியாசம இன்றி ஏக இறைவனை வணங்குகின்றோம. அந்த பள்ளியில் காட்டும ஒற்றுமை வெளி வாழ்விலும் பிரகாசிக்க வேண்டும்.

நாம தற்போது பல பிரச்சினைகள் நிறைந்த காலப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம. நமது ஒற்றுமை ஏனைய மதத்தினருக்கும ஒரு முன்மாதிரியாகத் திகழ வேண்டும். இன்று எம மத்தியில் பல பிரிவுகள் தோன்றத் தொடங்கியுள்ளன.

இறை தூதர் [ஸல்] மரணிக்குமபோது ஒரே அமைப்பாக இருந்த இஸ்லாம இன்று பலகூறுகளாகக் காட்சியளிக்கின்றது.

நாம பிளவுபட்டிருப்பதனால் எமது முக்கிய பள்ளிவாசலான "பைத்துல் முகத்திஸை" இழந்துள்ளோம. இந்நிலை தொடர்



## இலங்கையில் இனநெருக்கடிக்கு இடமளிக்க வேண்டாம்

### பொது சேவையாளர் சங்க தலைவர்

கண்டி மே 6

இந்நாட்டில் இனவாத நெருக்கடிகளுக்கு சிறிதளவேனும் இடம அளிக்காதிர்கள். சகல அரசியல் கட்சிகளும் இதனை உணர்ந்து செயல்படக் கூடிய காலம இப்பொழுது ஏற்பட்டுள்ளது.

இலங்கைப் பொதுச் சேவையாளர் சங்கத்தின் தலைவர்

நம சட்ட நடவடிக்கை எடுத்து ஓரளவு வெற்றியும கண்டது.

இருப்பினும அந்தத் தொழிற்சாலைகள் நீதிமன்ற உத்தரவுக்கு பணிந்து போகத் தவறின. அப்பகுதி மக்கள் தொடர்ந்தும அசௌகரியத்தை அனுபவித்தனர்.

இந்தக் கட்டத்தில் சுற்றுப்புற சூழல் அமைச்சு செயலில் இறங்கியது- இந்த தொழிற்சாலைகளை வேறு இடத்திற்கு கொண்டு சென்று விட வேண்டும என உறுதியான முடிவை எடுத்தது-

கொழுமபுத் துறைமுகத்தில் இரண்டு வருட காலமாக இழுபறிப்பட்ட இரசாயன கழிவுப் பொருள் விவகாரத்திலும அமைச்சு இதேவிதமாக செயலில் இறங்கியிருக்கிறது-

மேற்குக் கரையோரப் பிரதேச எண்ணெய்க் கழிவு விவகாரம தொடர்பாகவும அது உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இரசாயனக் கழிவுப் பொருள் விவகாரத் தீர்வில் அரசு நமபிக்கை கொண்டிருக்கிறது. இருப்பினும விரைவில் தீர்வு ஏற்படும என்பதை அறுதியிட்டுக் கூற முடியாதிருக்கிறது-

இந்த கழிவுப் பொருள்களை பிரிட்டனுக்கு அனுப்பி அழித்து விடலாம என சில வாரங்களுக்கு முன்னர் அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

இது நடக்குமா? பிரிட்டிஷ் துறைமுக சட்ட ஒழுங்குப் பிரமாணங்கள் இதற்கு இடமளிக்க மாட்டா என்று தெரிகிறது-

இந்த இரசாயனக் கழிவுகள் எஙகிருந்து நமது துறைமுகம வந்து சேர்ந்தனவோ அஙகேயே இவற்றைத் திருப்பி அனுப்பி விடுவது என இப்போது மாற்றுத் திட்டம ஒன்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது-

கராச்சிக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படும என்ற இந்த முடிவு நிறைவேறுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும.

இவ்வாறான விவகாரஙகளைத் தவிர்க்கவும தீர்த்து வைக்கவும என்ன செய்யலாம?

அரசு சர்வதேச உதவிகளையும ஒத்துழைப்புகளையும தேடலாம. பொறுப்பானவர்களுக்கு எதிராக கடும நடவடிக்கையை எடுக்கலாம.

பகுதி அஸ்பிரினை எடுத்துக் கொண்டால் இரண்டொரு தினஙகளில் தடிமன் தானாகவே விட்டுவிடும-

ஆனாலும் மருத்துவம செய்து கொண்டால்தான் நோய் தீருமென்பது உலகெஙகும் உள்ள பெருமபாலான மக்களின் உறுதியான நமபிக்கையாக இருந்து வருவதால் இந்த பலவீனத்தைப் பயன்படுத்தி பல மருந்த தயாரிப்பு நிறுவனஙகள் தடிமனுக்கும இருமலுக்கும பல்வேறு மருந்துகளைத் தயாரித்து பலகோடி ரூபாவுக்கு வியாபாரம செய்து வருகின்றன-

இந்தத் தடிமன் எவ்வாறானவை என்பதை சர்வதேச சுகாதார நடவடிக்கை அமைப்பு என்ற நிறுவனம சமீபத்தில் ஆராய்ந்தது- உலகின் பன்னிரெண்டு பிரதேசஙகளில் விற்பனைக்கு விடப்பட்டிருக்கும

அதாவது நோய் தற்காலிக அமைப்பு, தத்தமது நாடுகளில் மாகக் குணமானாலும் கூட, விற்பனைக்கு விடப்பட்டிருக்கும மருந்துப் பொருட்களின் மூர இருமல் - தடிமன் மருந்துகளை னான போக்குக் காரணமாக அந்நாட்டு அரசாஙகஙகள்

# இலங்கையில் இனநெருக்கடிக்கு இடமளிக்க வேண்டாம்

## பொது சேவையாளர் சங்க தலைவர்

கண்டி மே 6

இந்நாட்டில் இனவாத நெருக்கடிகளுக்கு சிறிதளவேனும இடம அளிக்காதிருக்கள்- சகல அரசியல் கட்சிகளும் இதனை உணர்ந்து செயல்படக் கூடிய காலம இப்பொழுது ஏற்பட்டுள்ளது-

இலஙகைப் பொதுச் சேவையாளர் சஙகத்தின் தலைவர் திரு ஜயரட்ன மலியகொட இவ்வாறு கூறினார்-

கண்டி ஜோர்ஜ் ஈ டி சில்வா பூஙகாவில் அணமையில் நடைபெற்ற மேதின பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுமபொழுது அவர் மேலும் கூறியதாவது—

தொழிலாளர் வர்க்கமே இந்நாட்டின் அபிவிருத்திக்கான முதுகெலுமபாகும-

தொழிலாளர் வர்க்கத்தின் உயர்வும விடிவும அவர்களின் ஒருமைப்பாட்டிலும ஐக்கியத்திலுமே தஙகியுள்ளன.

நம நாட்டுச் சனத் தொகையில் மூன்றில் ஒரு பஙகினர் தொழிலாளர்களே! அவ்வாறானால் அவர்களின் சுபீட்சத்திற்கு வகை செய்வது ஆளுங கட்சியினரின் பொறுப்பாகும-

தொழிலாளர்களின் மேமபாட்டுக்கும அவர்களின் மத்தியில் ஒருமைப்பாட்டையும நிலைநாட்ட சகல தொழிற் சஙகஙகளும் ஒன்றிணைய வேண்டும-

நாம இந்த உயரிய இலட்சியத்தின் கீழ் ஒன்று திரள வேண்டும- இடதுசாரி இயக்கஙகள் பலவும பிளவுண்டு வேறுபடும பொழுது அது தொழிலாளரின் நலனையே பாதிக்கும-

தொழிலாளர் வர்க்கம தொடர்ந்தும பிளவுபட்டு நலிவடையுமானால் எமக்கு விடிவே கிடையாது- — என்றார்-

இந்தக் கூட்டத்துக்குத் தலைமைதாஙகிய பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் கலாநிதி பர்ட் கஜமேரகெதர பன்வில மாவட்டத் தலைவர் திரு கே வெண்டிநாதன் ரஙகல மாவட்டத் தலைவர் திரு குணரட்ன பண்டா ஆகியோரும உரை நிகழ்த்தினார்கள்-

[இ—017]

# தெமட்டகொட கொட்டாஞ்சேனை

## கொலைகளுக்கிடையே தொடர்பா?

## பொலீஸார் சந்தேகம்

கொழுமபு மே 7

கொழுமபு தெமட்டகொடயில் நடந்த கொலைகளுக்கும கொட்டாஞ்சேனையில் நடந்த கொலைக்கும இடையே ஏதாவது தொடர்புகள் உள்ளனவா என்பது குறித்த பொலீஸாருக்கு சந்தேகஙகள் எழுந்துள்ளன-

கடந்த 30ஆம திகதி இரவு தெமட்டகொடை ரயில் நிலையத்திற்கு அருகே ஒரு ஆணும பெண்ணும வெட்டிக் கொலை செய்யப்பட்டிருந்தனர்-

அஙகிருந்த அடையாள கார்ட் ஒன்றின்படி கொலையுண்ட ஆண் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வராஜா வைரமுத்து என அடையாளம காணப்பட்டார்- ஆனால் பெண் அடையாளம காணப்படவில்லை-

இவர்கள் இருவரும இச்சமபவத்திற்கு முன்னர் புறக்கோட்டையில் உள்ள ஹோட்டலொன்றிலேயே தஙகியிருந்துள்ளனர்-

சுமார் பத்து வருடஙகளாக கனடாவில் இருந்த இவர்கள் இரண்டு மாதஙகளுக்கு முன்னரே தாயகம திருமபியிருந்தனர்- இஙகு அவர்கள் ஏஜென்சி ஒன்றை நடத்தி வந்துள்ளனர் எனவும விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது-

கொலை செய்யப்பட்ட பின்னர் இவர்களிடம இருந்த தஸ்தாவேஜுகளை கொலைஞர்கள் எடுத்துச் சென்றுள்ளனர்-

இதேபோல் கடந்த 29ஆம திகதி கொட்டாஞ்சேனையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞர் டெலோ இயக்கத்தைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது-

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக இப்பகுதியில் உள்ள முகவர் நிலையம ஒன்றுக்கு வந்திருந்த போதே இவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்-

[ல—ர]

அத்துடன் நமது துறைமுகத்திற்கு வந்து போகும கப்பல்கள், எண்ணெய் தாஙகிகள் மீது தீவிர கண்காணிப்பை மேற்கொள்ள தனியான பிரிவு ஒன்றையும அமைக்க வேண்டும.

உலக நாடுகள் அண்டகோளஙகளையே காப்பதற்கான வழிவகைகள் பற்றி ஆராய்கின்றன. நாம நமது மணித்திரு நாட்டைக் காப்பாற்றத் தவறலமா?



ஆஸ்திரேலியா தூதரக அபிவிருத்தித் திட்டச் செயலாளர் திரு கோர்டன் ஹேர்பட்டை, மூஸா இயக்கத்தின் தலைவர் ஜனாப் எம ஏ எம றயீஸ் மாலையிட்டு வரவேற்பதை படத்தில் காண்க.
[படம- எம ஏ பகுர்தீன்] (இ-035)

# ஆஸ்திரேலிய அபி. திட்ட செயலர்

## சம்மாந்துறை விஜயம்

அக்குரைப்பற்று மே 6

ஆஸ்திரேலியா தூதரக அபிவிருத்தித் திட்டச் செயலாளர் திரு கோர்டன் ஹேர்பட் அணமையில் சமமாந்துறைக்கு விஜயம ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இவர் சமமாந்துறை மூஸா இயக்கத்தின (முஸ்லிம ஐக்கிய மாணவர் அமைப்பு) ரின் வேண்டுகோளின் பேரில் முஸ்லிம ஐக்கிய மாணவர் அமைப்பின் செயலகத்துக்கும விஜயம செய்தார்.

அஙகு அவர் சுயதொழில் வாய்ப்புத் திட்டஙகளில் ஒன்றான மூஸா கார்மன்ட் எனும ஆடை தயாரிப்பு நிலையத்தினையும, பின்தஙகிய வறிய மாணவர்களின் கல்வி விருத்திக்காக இவ்வமைப்பு நடைமுறைப்படுத்தும "ஒக்சோனியோ" கல்வி நிலையத்தினையும பார்வையிட்டார்.

இவ்வமைப்பின் தலைவர் ஜனாப் எம ஏ எம றயீஸ், செயலாளர் ஜனாப் எம அன்வர் இஸ்மாயில் ஆகியோர் மேற்படி அமைப்பு நடைமுறைப்படுத்தி வரும இரு செயற்திட்டஙகள் பற்றி விரிவாக விளக்கினர்.

இவ்வமைப்பு மேற்கொள்ள உத்தேசித்துள்ள பொருளாதார அபிவிருத்தித் திட்டஙகளையும விவரித்தனர். மேலும இவ்வமைப்பினர் சென்ற கால கலவரஙகளினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு தொடர்பாக மேற்கொள்ளவுள்ள செயற்திட்டஙகளை உள்ளடக்கிய மகஜர் ஒன்றையும திரு ஹேர்பட்டிடம கையளித்தனர்.

தூதரகப் பிரதிநிதி திரு ஹேர்பட்டின் விஜயத்தின் போது சமமாந்துறைப் பிரஜைகள் குழுத் தலைவர் சட்டத்தரணி ஜனாப் யூ எல் எம மொகிதீன், அமைப்பின் ஆலோசகர் ஜனாப் எம ரி எம சஹீட், தேசிய சேமிப்பு வஙகியின் முகாமையாளர் ஜனாப் எஸ் எல் அகமட் ஆகியோரும பிரசன்னமாயிருந்தனர்.

(இ-035)

என்று வித்தியாசம இன்றி ஏக இறைவனை வணஙகுகின்றோம- அந்த பள்ளியில் காட்டும ஒற்றுமை வெளி வாழ்விலும பிரகாசிக்க வேண்டும-

நாம தற்போது பல பிரச்சினைகள் நிறைந்த காலப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம- நமது ஒற்றுமை ஏனைய மதத்தினருக்கும ஒரு முன்மாதிரியாகத் திகழ வேண்டும- இன்று எம மத்தியில் பல பிரிவுகள் தோன்றத் தொடஙகியுள்ளன.

இறை தூதர் [ஸல்] மரணிக்குமபோது ஒரே அமைப்பாக இருந்த இஸ்லாம இன்று பலகூறுகளாகக் காட்சியளிக்கின்றது-

நாம பிளவுபட்டிருப்பதனால் எமது முக்கிய பள்ளிவாசலான "பைத்தல் முகத்திஸை" இழந்துள்ளோம- இந்நிலை தொடர்ந்து நீடித்தால் நாம இன்னும பல இன்னல்களைச் சந்திக்க நேரிடலாம-

இறைதூதர் [ஸல்] அவர்கள் ஒற்றுமையின் அவசியத்தை பல இடஙகளில் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்- நாம வேறுபட்டால் நலிவடைந்து விடுவோம் என்றும எச்சரிக்கையையும எமக்குத் தந்துள்ளார்கள்-

எனவே எம வாழ்வில் நல்லதை கடைப்பிடித்து ஒழுகுவதற்கு அல்லாஹ் அருள்பாலிப்பானாக!

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்-

[ஸ—289]

# ரபீக் பெயரால் புலமைப் பரிசில்

கேகாலை மே 6

காலஞ்சென்ற வறக்காப்பொளையைச் சேர்ந்த பிரபல சமூக சேவையாளரான ஜனாப் மர்ஹூம ஏ ஆர் எம ரபீக் ஜே பி பெயரால் புலமைப் பரிசில் நிதியமொன்று ஆரமபிக்கப்பட்டுள்ளது-

வறக்காப்பொளை பாபுஸ் ஹுஸ்ன் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று க பொ த [சாதாரணப்] பரீட்சையில் திறமையாக சித்தி பெறுபவர்களுக்கு இப் புலமைப் பரிசில் வழஙகப்படும-

அன்னாரின் குடுமபத்தினரால் இத்திட்டம ஆரமபிக்கப்பட்டுள்ளது-

இவ்வாண்டுக்கான புலமைப் பரிசிலை வறக்காப்பொளை மஸ்ஜித் மாவத்தையைச் சேர்ந்த மாணவி எஸ் ஏ எப் தினியா பெற்றுக் கொண்டார்-

[வ—197]

சுதந்திர பிரகடனத்தை வாபஸ் பெறாவிட்டால்

# லத்வியா மீது நேரடி ஜனாதிபதி ஆட்சி?

## கொர்பச்சேவ் எச்சரிக்கை

**மாஸ்கோ, மே 6**

**இரு நாட்களுக்கு முன் செய்து கொண்ட சுதந்திர பிரகடனத்தை வாபஸ் பெறாவிட்டால் லத்வியா மீது நேரடி ஜனாதிபதி ஆட்சியை அமுல் செய்யப்போவதாக ரஷ்ய ஜனாதிபதி கொர்பச்சேவ் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.**

ரஷ்ய தொலைக்காட்சி சேவை கொர்பச்சேவை நேரடியாக குறிப்பிட்டு இதனை கடந்த ஞாயிறன்று அறிவித்தது–

அத்துடன் அரசியல் பொருளாதார மற்றும் நிர்வாக முறையைப் பொறுத்தவரை எதிர் நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரம் தனக்கு இருப்பதாக ரஷ்ய ஜனாதிபதி கொர்பச்சேவ் லத்விய கமயூனிஸ்ட் கட்சித் தலைவர் அல்பிரட் ரூபிக்குக்கு தொலைபேசியில் கூறியதாகவும் தொலைக்காட்சி மேலும் கூறியது–

இதேவேளை ரஷ்யாவுடன் பேசுவதற்கு தயாராக இருப்பதாக லத்விய ஜனாதிபதி அன்டோனி தொர்புனோவ் தெரிவித்துள்ளதையும் தொலைக்காட்சி மீண்டும் ஒளிபரப்பியது–

சுதந்திரத்தை கைமாற்றும் காலம் ஆரம்பித்துள்ளதையே மேற்படி சுதந்திரப் பிரகடனம் குறிக்கிறது– பேச்சுவார்த்தைக்கு இடமுண்டு என்று லத்விய ஜனாதிபதி தனது உரையில் மேலும் குறிப்பிட்டிருந்தார்–



கொர்பச்சேவ்

கடந்த மார்ச் 11 இல் லிதுவேனியா செய்த சுதந்திரப் பிரகடனத்தை விட தமது சுதந்திர பிரகடனம் மிதமானது என லத்விய தலைவர்கள் கூறுகின்றனர்–

மற்றைய பால்டிக் குடியரசான எஸ்தோனியாவும் இவ்வித சுதந்திர பிரகடனமொன்றை செய்து கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது–

எனினும லத்வியாவின் மேற்படி பிரகடனத்தை கொர்பச்சேவ் நிராகரித்துள்ளதாக அல்பிரட் ரூபிக் கூறுகிறார்–

மேற்படி பிரகடனம அரசமைப்புக்கு முரணானது– ரஷ்யாவுடனான குடியரசின் உறவுகள் முறிய இது வழிவகுக்கும கடந்த 4ஆம திகதிய சுதந்திர பிரகடனத்திற்கு முன்னர் இருந்த வகையில் லத்வியா மீண்டும் உறவுகளை அமைத்துக் கொள்ளும வரை எவ்விதப் பேச்சுவார்த்தைக்கும இடமில்லை என்று ஜனாதிபதி கொர்பச்சேவ் கூறியதாக லத்விய கமயூனிஸ்ட் கட்சித் தலைவர் அல்பிரட் ரூபிக் தெரிவித்தார்–

(ந)

## ரயில் விபத்தில் அறுவர் மரணம்

சிட்னி மே 7

சிட்னி நகரத்துக்கு சுற்றுப்புறத்தில் இரு ரயில்கள் மோதிக் கொண்டதில் கிட்டத்தட்ட 6 பேர் மரணமுற்றனர்– 150 பேர் காயமுற்றனர்–

சிட்னிக்கு 15 மைல் வடக்கில் இந்த விபத்து ஏற்பட்டது–

[ந]

## பெனாஸிரின் தாயார் வெளிநாடு விஜயம்

இஸ்லாமாபாத் மே 7

பாகிஸ்தானிய பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் தாயாரும அமைச்சரவையின் சிரேஷ்ட அமைச்சருமான நுஸ்ரத் பூட்டோ 10 நாள் அரசியல் விஜயம ஒன்றை மேற்கொண்டு சீனாவுக்கும தென்கொரியாவுக்கும நேற்று ஞாயிற்றுக்கிழமை பயணமானார்–

நுஸ்ரத் பூட்டோயுவுடன் பலம்வாய்ந்த தூதுக் குழுவொன்றும உடன் செல்கிறது–

[ந]

ரஷ்யாவுக்கான

## வர்த்தக சலுகை: தொடர்ந்து வழங்குக

### அமெரிக்காவுக்கு ரஷ்ய அதிகாரி வலியுறுத்து

வாஷிங்டன் மே 7

அமெரிக்காவுக்கும ரஷ்யாவுக்கும இடையிலான பொருளாதார உறவுகளில் பால்டிக் குடியரசுகளின் சுதந்திரம பற்றிய பேதங்கள் ஊடுருவுவதை ரஷ்யா விரும்பவில்லை–

ரஷ்ய வெளிநாட்டு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் அமெரிக்க தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு கூறினார்–

வர்த்தக உடன்படிக்கையோ முன்னுரிமை பெறும நாடு என்ற ஸ்தானத்தையோ பெறாமல் நாம இதுவரை இருந்திருக்கிறோம– தொடர்ந்தும அப்படியே இருக்கலாம–

அமெரிக்காவுடனான எமது பொருளாதார உறவு சீர்குலையுமானால் அந்த இடத்தை ஜெர்மனி போன்ற நாடுகள் நிரப்பலாம என்று அவர் கூறினார்–

எனினும வர்த்தக ரீதியில் முன்னுரிமை பெறும நாடு என்ற ஸ்தானத்தை ரஷ்யாவுக்கு வழங்கும் உடன்படிக்கையை அமெரிக்கா எதிர்வரும 30ஆம திகதி வாஷிங்டனில் செய்து கொள்ளும என எதிர்பார்க்கப்படுகிறது–

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும ரஷ்ய ஜனாதிபதி கொர்பச்சேவும அன்றைய தினம வாஷிங்டனில் சந்தித்து பேசும போதே இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படும–

எனினும லிதுவேனியா மீது விதித்துள்ள பொருளாதார தடையை நீக்குமவரை ரஷ்யாவுக்கு அந்த ஸ்தானத்தை வழங்கக் கூடாது என அமெரிக்க செனட் சபையில் 73க்கு 24 என்ற வாக்கு வித்தியாசத்தில் ஜனாதிபதி புஷ்ஷை வலியுறுத்தும தீர்மானம ஒன்று கொண்டு வரப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது–

ரஷ்யா மீது இவ்வித வர்த்தக தடையை விதிக்க வேண்டுமென அமெரிக்காவுக்கு விஜயம செய்துள்ள லிதுவேனிய பிரதமர் அமெரிக்காவை வலியுறுத்தியிருக்கிறார்–

[ந]

# உலகச் செய்திகள்

## கௌதமாலா விமான விபத்தில் 17 பேர் மரணம்

கௌதமாலா மே 7

கௌதமாலா நகரின் வீடுகள் நிறைந்த பகுதியில் விமானம ஒன்று விழுந்து நொருங்கியது– 17 பேர் கொல்லப்பட்டனர்– இதில் ஐவர் சிறுவர்களாவர்–

இந்த விபத்தில் 5 சேரி வீடுகள் எரிந்து சாமபராகின–

விமானமோட்டிகள் மூவருடன் எரியுண்ட வீடு ஒன்றில் பகலுணவை அருந்திக் கொண்டிருந்த முழுக் குடும்பமும விபத்தில் கொல்லப்பட்டனர்–

(ந)

நேட்டோ அங்கத்துவம் பற்றிய சிக்கல் தீர்வு

## ஜேர்மன் இணைப்புக்கான முட்டுக்கட்டைகள் நீங்கின

பொன், மே 7

இரு ஜெர்மனிகளும இணைவது தொடர்பாக நேட்டோ அங்கத்துவம பற்றிய விவகாரத்தில் இருந்து வந்த முட்டுக்கட்டை நீங்கியது–

இரு ஜெர்மனிகளையும இணைப்பது தொடர்பாக பேச்சுவார்த்தை தற்போது பொன்னில் நடைபெற்று வருகிறது–

இரு ஜெர்மனிகளுடன் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் இப்பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றன.

ஒருங்கிணைந்த ஜெர்மனி நேட்டோ அமைப்பில் அங்கத்துவம வகிக்க வேண்டுமென்ற மேற்கு நாடுகளின் கோரிக்கைக்கு மாஸ்கோ இதுவரை எதிர்ப்பு தெரிவித்து வந்தது–

வார்ஸோ ஒப்பந்தத்துக்கு அமையாமல் நேட்டோ அமைப்பில் மட்டும எதிர்கால ஜெர்மனி அங்கத்துவம பெற்றால் அது ரஷ்ய வெளிநாட்டமைச்சர் எவெர்ட் செவர்ட்சே கடந்த சனிக்கிழமை பேச்சுவார்த்தையின் போது கூறினார்.

இதனையடுத்து ஜெர்மன் இணைப்பு விவகாரத்தில் இருந்து வந்த முட்டுக்கட்டை நிலை நீங்கியது–

இரு ஜெர்மனிகளினதும பொருளாதார இணைப்பு எதிர்வரும ஜூலை 2 ஆம திகதி இடம பெறுவதற்கு ஏற்கனவே திட்டமிட்டுள்ளது–

ஒருங்கிணைந்த ஜெர்மனியின்

கணவன் மீது விடுக்கப்பட்ட

## ஊழல் குற்றச்சாட்டு: பெனாஸிரின் கணவர் மறுப்பு

துபாய் மே 7

பாகிஸ்தானிய பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் கணவர் மீது விடுக்கப்பட்ட ஊழல் குற்றச்சாட்டை ... அலிப் அலிப் சர்தாரி சம்பந்தப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்–

அக்குவினோ பதவி விலகா விட்டால்

துபாய் மே 7

பாகிஸ்தானிய பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் கணவர் மீது விடுக்கப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு அவர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு குடியரசுக்கு குறுகிய விஜயமொன்றை மேற்கொண்டுள்ள அவர் அங்கு வெளியாகும் ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே இந்த மறுப்பைத் தெரிவித்திருக்கிறார்.

ஆஸ்பத்திரி ஒன்றைக் கட்டுவதற்கான 8 லட்சத்து 80 லட்சம் டாலர் நிதி களவெடுக்கப்பட்டது பற்றிய ஊழலில் பெனாஸிரின் கணவரான அலிப் அலிப் சர்தாரி சம்பந்தப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

மேற்படி குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை. அவர்கள் என்னை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லட்டும். நீதி விசாரணைக்கு நான் தயாராக உள்ளேன் என்று அவர் கூறினார்.

பெனாஸிருடனான அவரது திருமணம் பற்றி கேட்கப்பட்ட போது பெனாஸிரின் நிரலில் நடப்பது கஷ்டமான ஒன்று அது எவ்வளவு கஷ்டமானது என்பதை நான் ஒருவனே நன்கு அறிவேன் என்று குறிப்பிட்டார்.

[ந]

அக்குவினோ, பதவி விலகா விட்டால்!

# ஆட்சியை கைப்பற்றுவதில் அடுத்தமுறை வெற்றி பெறுவோம்

## கிளர்ச்சி இராணுவ தளபதி பத்திரிகையில் பேட்டி

மணிலா, மே 7

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி அக்குவினோ பதவி விலக வேண்டுமென இராணுவ கிளர்ச்சியாளர்கள் தலைவர் பத்திரிகை பேட்டியொன்றில் கூறியிருக்கிறார்.

அக்குவினோவின் ஆட்சியை கைப்பற்றும் முயற்சியில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை எமக்கு இப்போது இருக்கிறது. முன்னைய சதிப் புரட்சியில் நாம் விட்ட பிழைகளை தற்போது திருத்திக் கொண்டுள்ளோம்.

கடந்த டிசம்பரில் நாம் மேற்கொண்ட எமது முன்னைய முயற்சி அமெரிக்கா தலையிட்டதால் தோல்வியுற்றது. ஆனால் மீண்டும் அமெரிக்கா இவ்விடயத்தில் தலையிட்டால் அவர்கள் மீது கடுமையாக நடந்து கொள்வோம். அதற்கான பல திட்டங்கள் எம்மிடம் உண்டு.

வலது சாரி கிளர்ச்சி வாத தலைவர் கிரகோரியோ ஹொனாசன் பிலிப்பைன்ஸ் பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறியிருக்கிறார்.

கடந்த டிசம்பரில் ஹொனாசவின் தலைமையில் அக்குவினோவின் ஆட்சியை கைப்பற்ற சுமார் 3000 படை வீரர்கள் சதிப் புரட்சியொன்றை மேற்கொண்டனர்.

இச்சம்பவம் அக்குவினோவின் உதவிக்கு வந்த அமெரிக்க விமானங்கள் நேரடியாக கிளர்ச்சியாளர்கள் நேரடியாக கிளர்ச்சிவாதிகள் மீது தாக்குதல் நடத்தவில்லை. ஆனால் பிலிப்பைன்ஸின் தலைநகரத்தின் மீது தொடர்ந்து பறந்தன.

இதனால் அச்சுறுத்தலுக்கு ஆளான கிளர்ச்சி விமானங்கள் வானில் பறக்க முடியாமற் போயின. கிளர்ச்சிவாதிகளின் முயற்சி தோல்வியுற இது ஒரு முக்கிய காரணமாக இருந்தது.

தற்போது 1000 வீரர்களை தான் பயிற்றுவித்து வருவதாகவும் தனது அடுத்த முயற்சியில் அக்கினோவின் ஆட்சி கைப்பற்றப்பட்டு விடும் என்று ஹொனாசன் தனது பேட்டியில் கூறியிருக்கிறார்.

1986 இல் நான் தலைமை வகித்து நடத்திய புரட்சியின் காரணமாகவே அக்குவினோ பதவிக்கு வந்தார்.

ஆனால் அவரது ஆட்சியில் தற்போது அநீதியும் ஊழலும் பெருமளவில் இடம் பெறுகின்றன.

அடிக்கடி ஏற்படும் மின்சார தடை, அதிகரித்த பண வீக்கம் சட்டம் அமைதி ஒழுங்கின்மை அதிகரிப்பதால் தலைமைத்துவ வெற்றிடம் ஏற்பட்டிருப்பதாக அவர் கூறுகிறார்.

ஆனால் கடந்த ஞாயிறு தொலைக்காட்சியில் உரையாற்றிய அக்குவினோ மேற்படி குற்றச்சாட்டுகளை மறுத்தார். அதிகாரத்தைக் கைப்பற்றுவது மட்டுமே கிளர்ச்சிவாதிகளின் நோக்கம்.

எனினும் 21 வருட கால கம்யூனிஸ்ட் தீவிரவாதம் ஆதரவு இன்மையால் தற்போது நலிவடைந்துள்ளது. புரட்சி தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டதால் வலது சாரி கிளர்ச்சிவாதிகள் பலம் பெருமளவு குறைந்துள்ளது என தொலைக்காட்சியில் அக்குவினோ கூறினார். (ந)

# அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர்

## போலந்து விஜயம்

வார்ஸோ, மே 6

அமெரிக்க வெளிநாட்டமைச்சர் ஜேம்ஸ் பேகர் கடந்த ஞாயிற்றுக்கிழமை போலந்து வந்து சேர்ந்தார்.

ஜெர்மன் இணைப்பு பற்றி பொன் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்ட அவர் அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தையில் போலந்தையும் சேர்த்துக் கொள்வது பற்றி பேசவே இங்கு வந்துள்ளார்.

ஜெர்மன் இணைப்பு தொடர்பாக அடுத்த சுற்று பேச்சு எதிர்வரும் ஜூலையில் பாரிஸில் நடைபெறும். அப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள போலந்து வெளிநாட்டமைச்சர் அழைக்கப்படுவார்.

ஒருங்கிணைந்த ஜெர்மனியின் எல்லை விவகாரம் குறித்த பேச்சுவார்த்தையில் போலந்தின் பிரசன்னம் அவசியமானதாக அமெரிக்க வெளிநாட்டமைச்சர் கூறினார். (ந).

அண்மைய கலவரங்களில்

# கொல்லப்பட்டோர் குடும்பங்களுக்கு

## நேபாள அரசு நிதி உதவி

காத்மண்டு மே 7

நேபாளத்தில் அண்மைக் கால ஆர்ப்பாட்டங்களில் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்குவதை நேபாள அரசு ஆரம்பித்திருக்கிறது.

கொல்லப்பட்ட ஒருவரின் குடும்பத்திற்கு 25,000 நேபாள ரூபா வீதம் வழங்கப்படும்.

பல்கட்சி ஜனநாயகத்திற்காக அண்மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களில் கொல்லப்பட்டோரின் சரியான எண்ணிக்கை பற்றி அரசு எதுவும் கூறவில்லை.

மேற்படி ஆர்ப்பாட்டங்களில் கிட்டத்தட்ட 500 பேர் வரை இறந்துள்ளதாக பிரதமர் கிருஷ்ண பிரசாத் பட்டாராய் அண்மையில் கூறியிருந்தார்.

எனினும் அவர் உயிரிழந்தவர்களையும் காயமுற்றோரையும் பற்றிய முழு எண்ணிக்கையை உத்தியோகப்பற்றற்ற முறையிலேயே தெரிவித்ததாக அரசாங்க வட்டாரங்கள் கூறின.

[ந]

# முன். ஜனாதிபதி ஆளும் கட்சியில் இருந்து விலகல்

ஜொகன்னர்ஸ்பேர்க், மே 7

தென் ஆபிரிக்க ஜனாதிபதி எப் டபிள்யூ டி கிளார்க்கின் இன ஒதுக்கல் சீர்திருத்தக் கொள்கை திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னாள் ஜனாதிபதி பி டபிள்யூ போத்தா ஆளும் தேசிய கட்சியிலிருந்து விலகினார். ([)

வார்ஸோ ஒப்பந்தத்துக்கு அமையாமல் நேட்டோ அமைப்பில் மட்டும் எதிர்கால ஜெர்மனி அங்கத்துவம் பெற்றால் அது தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்று ரஷ்யா கருதுகிறது.

எதிர்கால ஒருங்கிணைந்த ஜெர்மனி நேட்டோ அமைப்பில் அங்கம் வகிக்கும் அதேவேளை வார்ஸோ ஒப்பந்தத்துக்கு அமையவும் நடந்து கொள்ள வேண்டும் என்று ரஷ்யா எதிர்பார்க்கிறது.

ஆனால் ஒருங்கிணைந்த ஜெர்மனியின் இராணுவ நிலை பற்றி மாஸ்கோ தொடர்ந்தும் வலியுறுத்தப் போவதில்லை என வரும் ஜூலை 2 ஆம் திகதி இடம் பெறுவதற்கு ஏற்கனவே திட்டமிட்டுள்ளது.

ஒருங்கிணைந்த ஜெர்மனியின் தேர்தல்களை எதிர்வரும் 1991 இன் கடைசிப் பகுதியில் நடத்துவதற்கு மேற்கு ஜெர்மன் தலைவர் ஹெல்மட் கோல் ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளது.

நேட்டோ விவகாரம் தொடர்பாக இருந்து வந்த முட்டுக்கட்டை தற்போது நீங்கியிருப்பதால் இணைப்பு பற்றி சம்பந்தப்பட்ட இரு நாடுகளும் இனி சுதந்திரமாக தீர்மானித்துக் கொள்ளலாம் என மேற்கு ஜெர்மன் அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார். (ந)

லாகூரில்!

# ரயில் குண்டு வெடிப்பு

## 15 பேர் மரணம்: 30 பேர் காயம்

லாகூர், மே 7

ரயிலில் குண்டொன்று வெடித்ததில் 15 பயணிகள் கொல்லப்பட்டனர், 30பேர் காயமுற்றனர்.

ராவல் பிண்டியிலிருந்து லாகூரை நோக்கிச் சென்ற மேற்படி ரயில் லாகூரை அடைய 2 மைல் தூரத்தில் இருந்த போதே குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்தது. மேற்படி கடுகதி ரயிலின் மலசல கூடத்திலேயே இந்த குண்டு வைக்கப்பட்டிருந்தது.

கடந்த ஒருவார காலத்தில் லாகூரில் நடந்த மூன்றாவது குண்டு வெடிப்புச் சம்பவம் இதுவாகும்.

கடந்த 30 ஆம் திகதி பஸ்ஸொன்றில் குண்டொன்று வெடித்ததில் இருவர் கொல்லப்பட்டனர். 24 பேர் காயமுற்றனர்.

கடுகதி ரயிலில் நடந்த குண்டு வெடிப்பு ஒரு சதிநாச வேலை என ரயில்வே பகுதி பேச்சாளர் ஒருவர் கூறினார்.

(ஹ-ந)

# இஸ்ரவேல் பல்கேரியா மீண்டும் நல்லுறவு

ஜெருஸலேம், மே 6

23 வருட இடைவெளிக்குப் பின்னர் இஸ்ரவேலும் பல்கேரியாவும் தமக்குள் இராஜதந்திர உறவை ஏற்படுத்த பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளன.

இதன்பொருட்டு இஸ்ரவேல் வெளியுறவு அமைச்சர் மோஷே ஆறன் பல்கேரியா செல்கிறார்.

1967 இல் நடந்த யுத்தத்தின் பின்னர் பல நாடுகள் இஸ்ரவேலுடனான உறவைத் துண்டித்துக் கொண்டன. அதில் பல்கேரியாவும் ஒன்றாகும்.

பிஎ

வருடக்கணக்கில்

# இறக்குமதி பொருட்கள் துறைமுகத்தில் தேக்கம்

## 10ஆம் திகதிக்கு முன் அகற்ற பணிப்பு

கொழும்பு, மே. 7

துறைமுகத்தில் வருடக்கணக்கில் தேங்கிக் கிடக்கும பொருட்களை எதிர்வரும 10 ஆம திகதிக்கு முன் அகற்றிக் கொள்ள வேண்டும—

இவ்வாறு துறைமுக கப்பல் போக்குவரத்து அமைச்சர் திரு ரூபா கருணாதிலக்க அமைச்சுக்களுக்கும், திணைக்களங்களுக்கும, கூட்டுத்தாபனங்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்—

கூட்டுத் தாபனங்களாலும, அமைச்சுக்களாலும திணைக்களங்களாலும இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் வருடக்கணக்கில் துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கின்றன—

எதிர்வரும 10 ஆம திகதிக்கு முன்னதாக பொருட்களை அகற்றிக் கொண்டதும இறக்குமதி, செய்தல், களஞ்சியப் படுத்தல், அவற்றை விநியோகித்தல் போன்ற நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்படும—

இது தொடர்பாக எதிர்வரும 11 ஆம திகதி முற்பகல் 11-30 மணிக்கு துறைமுக அதிகார சபையின் அலுவலகத்தில் கூட்டம் ஒன்று நடைபெறும—

மேற்படி பொருட்களை துறைமுகத்தில் இருந்து அகற்றினால் துறைமுகத்தில் பொருட்களை இறக்குவதற்கு இலகுவாக இருக்கும—

அத்தோடு கப்பல்களுக்கு செலுத்தும தாமதக் கட்டணத்தையும் நஷ்டஈட்டு பணத்தையும மீதப்படுத்திக் கொள்ளலாம

இவ்வாறு அமைச்சர் கூறினார்—

(இ-ழ)

## வரதராஜாவின் இடத்திற்கு பொன்னுத்துரை

கொழும்பு, மே. 7

மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தில் 1988 ஆம ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட திரு கனகரத்தினம வரதராஜா என்பவரின் இடத்திற்கு திரு பொன்னுத்துரை சுகுமார் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்—

இதனை தேர்தல் ஆணையாளர் திரு சந்திரானந்த டி சில்வா அரசாங்க வர்த்தமானி மூலம வெளியிட்டுள்ளார்—

திரு சுகுமார் இந்த மாவட்டத்தில் கனகரத்தினம வரதராஜாவிற்கு அடுத்த அதிகப்படியான வாக்குகளை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது—

இவர்கள் இருவரும சுயேச்சைக் குழு (ஈரோஸ்)வின் சார்பில் போட்டியிட்டவர்கள்—

[இ-கு]

## மக்கள் பீதியுடன் வாழ்ந்த காலம் மாறிவிட்டது

### ம. மா. நாடாளுமன்ற உறுப்பினர்

கமபளை மே 6

இந்த நாட்டில் மீண்டும ஒரு சகஜநிலை ஏற்படுமா என்று எல்லா மக்களும பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தனர்— பலர் நமது நாட்டிற்கு இப்படியும ஒரு நிலை வருமா என்ற கவலையுடன் பீதியோடு வாழ்ந்தனர் இந்த நிலை இன்று மாறியுள்ளது—

இவ்வாறு கண்டி மாவட்ட உறுப்பினர் அல்ஹாஜ் ஏ ஆர் எம ஏ காதர் கூறினார்—

கமபளை உனமபுவ கிராமத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் அவர் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்—

கூட்டத்திற்கு மத்திய மாகாண முதலமைச்சர் திரு டபிள்யூ டி பி திசாநாயக்க தலைமை தாங்கினார்—

அவர் தொடர்ந்து பேசும போது கூறியதாவது—

நெருக்கடியான நிலைமையில் நாடு இருந்த சமயத்திலும எமது ஜனாதிபதி மனம தளராமல் நாட்டில் மீண்டும ஒரு சகஜமான நிலைமையை ஏற்படுத்துவதாக உறுதியளித்தார்—

அதோடு தாம மக்களுக்கு தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதிகளை எத்தனை இடைஞ்சல் மத்தியிலும எதிர்ப்புக்கள் மத்தியிலு கைவிட்டுவிடவில்லை—

ஒவ்வொன்றாக படிப்படியாக அவர் செயல்படுத்தி வருகிறார்—

இன்று மத்திய மாகாணத்தில் 3 எழுச்சிக் கிராமங்கள் ஆரமபித்து வைக்கப்பட்டன— அதில் எமது பகுதியிலுள்ள கழுகமுவ உனமபுவ கிராமங்களுக்கும அடங்குகின்றன—



## புகைப்படக் கண்காட்சி

லிபியா அரபு நாட்டின் மீது 1986ஆம ஆண்டு ஏப்ரல் மாதம 15ஆம திகதி அமெரிக்கா மேற்கொண்ட தாக்குதலை நினைவு கூரும பொருட்டு ஒழுங்கு செய்யப்பட்ட புகைப்படக் கண்காட்சியும, இஃப்தார் (நோன்பு திறத்தல்) நிகழ்ச்சியும அக்கரைப்பற்றிலுள்ள அமபாறை மாவட்ட மக்கள் காங்கிரஸ் பணிமனையில் அண்மையில் நடைபெற்றன.

புகைப்படக் காட்சியை பொது மக்கள் பார்வையிட்டுக் கொண்டிருப்பதைப் படத்தில் காண்க. படத்தில் அமபாறை மாவட்ட மக்கள் காங்கிரஸ் பொதுச் செயலாளர் சகோதரர் ஜனாப் ஹாசிமும காணப்படுகிறார்.

[படம— எம ஏ பகுர்தீன்]

## திருகோணமலையில் 7761 குடும்பங்கள்

### ஜனசக்தி உதவித் திட்டம்

திருகோணமலை மே 6

திருகோணமலை உற்ற பட்டணம சூழல் பகுதியிலுள்ள 12,460 ஜனசக்தி குடுமபங்களில் 7761 குடுமபங்கள் இதுவரை உதவி...

...விகளில் மூன்று கட்டங்களைப் பெற்றுவிட்டார்கள்—

ஏனையவர்களுக்கு ஏப்ரல் இறுதிப் பகுதியில் முதற் கட்ட உதவி வழங்கப்படும என்றும அவர் தெரிவித்தார்—

## ஹஜ் பயணிகள் குறை கூறும் வண்ணம் முகவர்கள் செயற்படகூடாது

### அமைச்சர் அஸ்வர் அறிவுறுத்து

கொழும்பு, மே. 7

ஹஜ் பயணிகளின் நலன்களைக் கவனிப்பதில் பிரயாண முகவர்கள் தமது முழுக் கவனத்தையும செலுத்த வேண்டும. ஹஜ்ஜாஜிகள் குறை கூறும வண்ணம பிரயாண முகவர்கள் செயற்படலாகாது.

முஸ்லிம சமய, கலாசார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வர் இவ்வாறு கூறினார்.

இவ்வருடம ஹஜ் யாத்திரையை ஏற்பாடு செய்யும அங்கீகரிக்கப்பட்ட பிரயாண முகவர்களை அமைச்சர் அஸ்வர் அண்மையில் வக்பு திணைக்கள அலுவலகத்தில் வைத்துச் சந்தித்து உரையாடிய போதே இவ்வாறு கூறினார்.

அமைச்சர் அஸ்வர் தொடர்ந்து கூறியதாவது—

இது வேறு பிரயாணங்கள் போன்றதல்ல.

ஐமபெரும இஸ்லாமியக் கடமைகளுள் இது இறுதியானது.

ஆகவே ஹஜ்ஜின் புனிதத்துவத்தை உணர்ந்து முகவர்கள் செயற்பட வேண்டும.

ஹஜ்ஜில் எங்காவது பிரயாணிகளுக்குப் பிரச்சினைகள், அசௌகரியங்கள் ஏற்பட்டால் அது பற்றி எனது அமைச்சுக்கே முறைப்பாடுகள் வரும. நாடாளுமன்றத்தில் விவகாரங்கள் எதிரொலிக்கும.

அமைச்சர் என்ற வகையில் எனக்கும அரசுக்குமே இது அபகீர்த்தியை உருவாக்கும.

ஆகவே பொறுப்புணர்வுடன் முகவர்கள் நடந்து கொள்ள வேண்டும என்றார்.

பிரயாண முகவர்களின் வினாக்களுக்கும ஹாஜி அஸ்வர் பதில் அளித்தார்.

அமைச்சின் செயலாளர் ஜனாப் எஸ் எச் எம ஜமீல், பணிப்பாளர் அல்ஹாஜ் எம எம அன்ஸார் ஆகியோரும இக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

(ந-007)

இரு மூடைகள் நிறைய

## போலி 500 ரூபா நோட்டுக்கள

### கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து விசாரணைகள் தீவிரமாகின்றன

இரு மூடைகள் நிறைய போலியான 500 ரூபா நோட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்ட சமபவம தொடர்பாக, இரகசிய பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தென் இந்தியாவில் இருந்து இந்தப் பண நோட்டுக்கள் கொண்டு வரப்பட்டுள்ளனவாம!

கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலுக்கு அருகில் இரு இளைஞர்கள் கைதாகி விசாரணை செய்யப்பட்ட போது, இந்த விவரம தெரிய வந்துள்ளது.

தீவிரவாத கோஷ்டி ஒன்றுக்கு ஆயுதங்களை வாங்குவதற்கே இந்தப் பணம பயன்படுத்தப்பட்டு இருப்பதாக இரக...

கைதான இருவருள் ஒருவர் தமிழர், மற்றவர் பறங்கியர்.

இவர்கள் கொழுமபிலும, தெஹிவளையிலும வசிப்பவர்கள்.

முதலாளி ஒருவரும இந்த மோசடி தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நோட்டுக்கள் இந்தியாவில் அச்சிடப்பட்டிருக்கலாமென்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

இவர்கள் கோட்டை மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

ஒவ்வொருவருக்கும தலா 30,000 ரூபா சரீர பிணை விதித்த மாஜிஸ்திரேட், சகல ஞாயிறு நாட்களிலும, காலையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில்...

ளுள்ள 12,460 ஜனசக்தி குடும்பங்களில் 7761 குடும்பங்கள் இதுவரை உதவி பெற்று விட்டன- ஏனைய குடும்பங்களுக்கும் விரைவில் உதவிகள் வழங்கப்படும்-

மேற்படி தகவலை உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஜனசக்திக்குப் பொறுப்பான அதிகாரி தெரிவித்தார்-

பட்டணமும் சூழலிலுமுள்ள உதவி பெறும் குடும்பங்களில் 7761 குடும்பங்கள் தங்கள் உத ... இப் பகுதியில் மற்ற ... உதவி வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்-

அவர் மேலும் கூறுகையில்;-

ஜனசக்தித் திட்ட உதவி பெறுவோரின் முயற்சியினால் அன்புவழிபுரம், செல்வநாயகம் உப்புவெளி ஆகிய கிராமங்களில் பல வீதிகள் புனரமைக்கப்பட்டிருக்கின்றன-

கிணறுகள் பாதைகள் புதிதாக நிறுவப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்-

(ஐ-287)

... எமது பகுதியிலுள்ள கழுகமுவ உனமபுவ கிராமங்களுக்கும் அடங்குகின்றன-

இவ்வாறு அவர் கூறினார்-

[ஐ-083]

அம்பாறை மாவட்ட மக்கள் காங்கிரஸ் பொதுச் செயலாளர் சகோதரர் ஜனாப் ஹாசிமும் காணப்படுகிறார்.

[படம்- எம் ஏ பகுர்தீன்]

(இ-035)

...றுக்கு ஆயுதங்களை வாங்குவதற்கே இந்தப் பணம் பயன்படுத்தப்பட்டு இருப்பதாக இரகசியப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

...ஞாயிறு நாட்களிலும், காலையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகுமாறும் சந்தேக நபர்களுக்கு உத்தரவு இட்டார். (ந-007)

# மலையக மக்களை விருப்பமின்றி நாட்டைவிட்டு அனுப்புவதற்கு ஆட்சேபம்

## மலையக ஆசிரியர் முன்னணி

தலவாக்கொல்லை, மே 6

எமமக்களை விருப்பமின்றி நாட்டை விட்டு அனுப்புவதை நாம அனுமதிக்கப் போவதில்லை-

மலையக ஆசிரியர் முன்னணியின் செயலாளர் திரு வீ டி தர்மலிங்கம இவ்வாறு கூறினார்

அக்கரப்பத்தனை உருளவள்ளி தோட்டத்தில் நடைபெற்ற மலையக மக்கள் முன்னணி மேதின கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்-

கூட்டத்திற்கு பிரதேச ம ம மு அமைப்பாளர் திரு எஸ் இராஜகோபால் தலைமை வகித்தார்-

திரு தர்மலிங்கம மேலும் கூறியதாவது-

இந்தியாவிற்கு எம மக்கள் அன்... அரசியல் நெருக்கடியில் ... முன்னணி விண்ணப்பித்தவர்கள் ... விருப்பத்தோடு விண்ணப்பிக்கு வில்லை-

ஆதலால் எம மக்களை அவர்கள் விருப்பமின்றி நாட்டை விட்டு அனுப்புவதை நாம அனுமதிக்கப் போவதில்லை-

இ தொ கா சக்தி வாய்ந்த அமைப்பாக இருந்தும அந்த அமைப்பை சரியான முறையில் வழிநடத்தாத காரணத்தால் எம மக்களின் பிரச்சினையை தொடர்ந்து தீர்க்க முடியாமல் இருக்கின்றது-

எனவேதான் மலையக மக்கள் முன்னணி சமூகத்தின் அவசியத் தேவையை கருதி அமைக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானோம-

மலையக மக்கள் முன்னணியை அதன் இலட்சியத்தையும எந்த தீய சக்திகளாலும அழிக்க முடியாது-

இது மலையக மக்களுக்காக அவர்களின் சுபீட்சத்திற்காக ஏற்படுத்தப்பட்ட இயக்கமாகும-

# ஈராக்கை இஸ்ரவேல் தாக்குவதாக அறிவிப்பு முஸ்லிம் உலகம் கவலை

## இஸ்லாமியா சம்மேளனம் கண்டனம்

அக்குரைப்பற்று மே 6

"மத்திய கிழக்கில் மேற்கத்திய வல்லரசின் செடுபிடியினை வைத்து இஸ்ரவேல் ஈராக்கைத் தாக்குவதாக பகிரங்கமாக அறிவித்துள்ளது- இது உலகில் உள்ள சமாதான விரும்பிகளையும குறிப்பாக முஸ்லிம உலகையும கவலைகொள்ளச் செய்துள்ளது:

அக்குரைப்பற்று அல்ஹிதாயா அல் இஸ்லாமியா சமமேளனத்தினர் தமது கண்டனத்தை இவ்வாறு தெரிவித்துள்ளனர்-

தமது கண்டன அறிக்கையில் மேற்படி சமமேளனத்தினர் மேலும குறிப்பிட்டுள்ளதாவது-

அமெரிக்காவின் செல்லப் பிள்ளையான இஸ்ரவேல் ஐநாவின் சட்டங்களை மதியாமல் அடாவடித்தனம செய்கிறது- இஸ்ரவேல் இது போன்ற காட்டுமிராண்டித்தனமான செயல்களை கைவிட்டு விட்டு சமாதான உலகை அமைக்க ஐ நா வோடும ஏனைய அரபு உலகோடும நல்லெண்ணம ஏற்பட உழைக்க வேண்டும-

இவ்வாறும அச்சம்மேளனத்தினர் குறிப்பிட்டுள்ளனர்-

அல்ஹிதாயா அல் இஸ்லாமியா சமமேளனத்தின் மத்திய குழு உறுப்பினர்களான ஜனாப் எம ஐ அபுல்ஹசன் ஜனாப் யூ எல் அப்துல் கபூர் ஆகியோரால் இக்கண்டன அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது- (இ-035)

ஜனநாயகத்தைப் பேசுபவர்கள் எமக்கு மேதின விழாக்கள் நடத்துவதற்குக் கூட அனுமதி வழங்குகிறார்கள் இல்லை-

இன்று குடியேற்றம எமது பகுதிகளில் அத்துமீறி நடக்கின்றது, தடுக்க வகையில்லாதவர்கள் ஆரவாரம செய்கிறார்கள்-

மாத சமபளமும சமபள உயர்வும தொடர்ந்தும நிராகரிக்கப்பட்டு வருகிறது- கூலி பகிர்வில் வெளியாரே லாபமடைகின்றனர் என்றார்-

மற்றும திரு மு சிவலிங்கம உட்பட பலரும் இங்கு உரையாற்றினர்-

(இ-400)

# சமய மறுமலர்ச்சிக்கு அடித்தளம் அமைப்போம்

## — தேவராஜ்

கொழும்பு, மே. 7

"மலையகத்தில் பீறிட்டு எழுந்து வரும சமய மறுமலர்ச்சி உணர்வை ஆக்கபூர்வமான வழியிலே நெறிப்படுத்தி எமது மக்களின் கலை கலாசார சமூக மேமபாட்டுக்கு அடித்தளம அமைப்போமாக"

இவ்வாறு சாமிமலை வரசித்தி விநாயகர் முருகன் ஆலய கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய இந்து சமய இந்து கலாசார தமிழ் அலுவல்கள் ராஜாங்க அமைச்சர் திரு பி பி தேவராஜ் குறிப்பிட்டார்.

இக்கும்பாபிஷேகத்தின் போது திரு தேவராஜ் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

"முருகனின் ஆறுபடை வீடுகளில் ஒன்றான சுவாமிமலை பெயரைத் தாங்கி அமைந்துள்ள இவ்வூர் ஆலயத்தின் அமைப்பு, உண்மையிலேயே சுவாமிமலையை நினைவுபடுத்துகின்றது.

மிகப்பெரும பொருட் செலவில், இவ்வாலயத்தைக் கட்டி எழுப்ப ஆலய தர்மகர்த்தா, ஏனைய நிர்வாகிகள் உழைத்ததோடு, இக்கும்பாபிஷேக விழாவையும சிறப்புற ஒழுங்கு செய்துள்ளனர்.

அத்துடன் இப்பிரதேச மக்களும உறுதுணையாக இருந்தமையினாலேயே இப்பெருவிழா நடைபெறுகின்றது-

"இந்த ஆன்மீக மறுமலர்ச்சி உணர்வை அடிப்படையாகக் கொண்டு எமது மக்களின் கல்வியையும, வாழ்க்கையையும நாம மேமபடுத்த வேண்டும. எமது நாகரீகத்தையும கலாசாரத்தையும பேண வேண்டும.

இக்கோயிலில் அறநெறிப் பாடசாலை ஒன்று உடனே ஆரமபித்தல் நல்லது. அதனை மையமாகக் கொண்டு, பண்ணிசை, நடனம போன்ற துறைகளையும நாம ஊக்குவிக்கலாம.

எனவே அமைப்புக்களை ஏற்படுத்தி இமமுயற்சிகளை மேற்கொண்டால் நான் எமது அமைச்சின் பூரண ஒத்துழைப்புக்களை வழங்கத் தயாராக உள்ளோம" எனக் குறிப்பிட்டார்.

இக் கும்பாபிஷேகத்தின் போது அமைச்சர்கள் ரேணுகா ஹேரத், யு பீ விஜேக்கோன் ஆகியோரும கலந்து கொண்டனர். (ஐ-ந)

# ரோந்து பொலீஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம்

## தேடுதலில் ஆயுதங்கள் சிக்கின

கொழும்பு, மே. 7

ரோந்துச் சேவையில் ஈடுபட்டிருந்த எல்பிட்டி பொலீஸார் மீது இனம தெரியாத நபர்கள் மறைந்திருந்து துப்பாக்கிப் பிரயோகம செய்தனர்-

இதையடுத்த பொலீஸார் இப்பகுதியில் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்-

இந்தத் தேடுதலின் போது பாழடைந்த வீடொன்றுக்குள் மறைக்க வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான ... ஆயுதங்களை அவர்கள் கைப்பற்றினர்-

கைத்துப்பாக்கிகள், உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துவக்குகள், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுகள், தோட்டாக்கள், இராணுவச் சீருடைகள் வாக்கி டோக்கி என்பன கைப்பற்றப்பட்ட ஆயுதங்களுள் அடங்கும்

எனினும இந்தச் சம்பவத்தில் எவரும் கைது செய்யப்படவில்லை-

[ல-ர]

எதிர்வரும் டிசம்பர் 22 முதல் 30 வரை

# சார்க் விளையாட்டு போட்டி

# கொழும்பில் நடைபெறும்

கொழும்பு, மே 6

எதிர்வரும் டிசம்பர் 22 ஆம் திகதி ஐந்தாவது சார்க் நாடுகளுக்கான விளையாட்டுப் போட்டி கோலாகலமாகக் கொழும்பில் ஆரம்பமாகும். டிசம்பர் 30 ஆம் திகதி வரை நடைபெற விருக்கும் இப்போட்டியில் பத்து விளையாட்டுகள் உள்ளடங்கும்.

கொழும்பில் அண்மையில் கூடிய தெற்காசிய விளையாட்டுச் சம்மேளனம் உத்தியோக பூர்வமாக இப்படி முடிவு செய்துள்ளது.

மெய்வல்லுநர் போட்டிகள் நீச்சல், உதைபந்தாட்டம், குத்துச் சண்டை, எடை தூக்கல், கரப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், டேபிள் டெனிஸ், ரைபிள் சுடுதல் ஆகிய விளையாட்டுகளே சேர்த்துக் கொள்ளப்படும்.

கடந்த முறை இஸ்லாமாபாத் போட்டியில் இடம்பெற்ற கபடி, ஸ்குவாஷ், மல்யுத்தம் ஆகிய ஆட்டங்கள் இலங்கை போட்டியில் நடத்தப்பட மாட்டா. இதே போலவே டெனிஸ் ரைபிள் சுடுதல் கூடைப்பந்தாட்டம் ஆகியவை உள்ளடக்கப்பட்டன.

கொழும்பு போட்டியின் போது உதைபந்தாட்டம், எடை தூக்கல், கரப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் ஆகியவை தவிர்ந்த ஏனைய விளையாட்டுப் போட்டிகள் ஆண், பெண் இரு சாராருக்கும் பொதுவானவையாகவே நடத்தப்படும்.

கொழும்பு ஒபரோய் ஹோட்டலில் கூடிய தெற்காசிய விளையாட்டுச் சம்மேளனத்தின் ஏழு நாட்டு தூதுக்குழுவினரும் இரண்டு முழுநாள் அமர்வுகளாக பூட்டப்பட்ட கதவுக்கு பின்னால் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தனர். அதன் பின்னரே தெற்காசிய போட்டியை எப்போது ஆரம்பித்து நடத்துவது என்பது பற்றியும் என்னென்ன ஆட்டங்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்பது பற்றியும் முடிவு செய்யப்பட்டது.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு டிசம்பர் 25 ஆம் திகதி ஆட்டங்கள் எதுவும் நடைபெற மாட்டா.

தெற்காசிய நாடுகளிடையே பிராந்திய ரீதியான விளையாட்டுப் போட்டி ஒன்று நடத்தப்பட வேண்டுமென்று 1981 ஆம் ஆண்டு ஜெர்மனியில் நடைபெற்ற 11 ஆவது ஒலிம்பிக் காங்கிரசில் முடிவு செய்யப்பட்டது. அப்போது இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், இலங்கை மற்றும் பங்களா தேசம் ஆகிய நாடுகளின் தூதுக்குழுக்கள் பிரசன்னமாக இருந்து இம்முடிவைச் செயல்படுத்த உறுதி பூண்டன.

பிராந்திய நாடுகளிடையே சகோதரத்துவம், நல்லெண்ணம் மற்றும் நட்புணர்வை ஏற்படுத்தச் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டு தெற்காசிய விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டு வருகிறது.

முதன் முதலாக 1964 ஆம் ஆண்டு காத்மண்டுவில் இப்போட்டி அரங்கேறியது.

(ரி—032)

## கிண்மேன்ஸ் கழகம் வென்றது

மடவளை, மே 6

கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கிண்மேன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

மடவளை பஸார் இளைஞர் விளையாட்டுக் கழகம் ஒழுங்கு செய்திருந்த நோன்புப் பெருநாள் தின விளையாட்டுப் போட்டியில் கிண்மேன்ஸ் விளையாட்டுக் கழக "ஏ" அணி "சசெக்ஸ்" அணியை 2—0 என்ற புள்ளி வித்தியாசத்தில் வெற்றியீட்டியது.

முதலாம் அரையிறுதிப் போட்டியில் கிண்மேன்ஸ் ஏ அணி சனிமவுண்ட் அணியை 2—0 என்ற புள்ளி வித்தியாசத்தில் வெற்றியீட்டியது.

இரண்டாம் அரையிறுதிப் போட்டியில் சசெக்ஸ் அணி கிண்மேன்ஸ் பீ அணியை 2—1 என்ற புள்ளி வித்தியாசத்தில் வெற்றியீட்டியது.

மேற்படி போட்டிகள் அண்மையில் மதினா மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

[ரி—431]

## திருத்துவ கல்லூரி வெற்றியீட்டியது

மதுரை, மே 6

திருத்துவக் கல்லூரி "றகர்" போட்டியில் வெற்றி பெற்றது.

அண்மையில் கண்டி போகம்புரை மைதானத்தில் நடைபெற்ற "றகர்" போட்டியில் திருத்துவக் கல்லூரி, தர்மராஜ கல்லூரியை "54-0" என்ற புள்ளி வித்தியாசத்தில் வெற்றியீட்டியது.

(ரி—431)

## கண்டி கம் உதாவ சைக்கிள் ஓட்டம்

கண்டி, மே 6

கண்டி பல்லேகலை என்னும் இடத்தில் உருவாகி வரும் 12 ஆவது கம உதாவ கிராம எழுச்சிக் கொண்டாட்டங்கள் தொடர்பாக கண்டியில் இருந்து கொழும்பு வரை நீண்ட தூர சைக்கிள் ஓட்டப் போட்டி நடைபெற உள்ளது.

இப்போட்டி இரண்டு கட்டங்களாக அமையும். 156 மைல்கள் தூரமான இப்போட்டி ஆண்களுக்கும் பெண்களுக்குமாக இரு கட்டமாக அமையும்.

ஜூன் 30 ஆம் திகதி தொடக்கம் ஜூலை முதலாம் திகதி வரை போட்டிகள் நடைபெறும். கண்டியில் இருந்தும் கொழும்பில் இருந்தும் போட்டிகள் காலை 7 மணிக்கு ஆரம்பமாகும்.

கண்டியில் இருந்து ஆண்களுக்கான போட்டிகள் கண்டி கட்டுகஸ்தோட்டை நுகவெல கலகெதர வேஉட குருநாகல் பொல்கஹவெல அம்பேபுஸ்ஸ கடவத்தை தேசிய கூட்டாசிக் கூட்டுத்தாபனம் வரையும் இடம்பெறும்.

இதேபோன்று மற்றும் ஒரு போட்டி கொழும்பில் இருந்து கண்டிக்கு அதே தினத்தில் மாளிகாவத்தை புதிய களனி பாலம் கடவத்தை ஆகியவற்றின் ஊடாக பல்லேகல கம உதாவ மத்திய நிலையத்துக்கு வந்தடையும்.

பெண்களுக்கான சைக்கிள் ஓட்டம் 17 கிலோ மீற்றர் தூரம் வரை இடம்பெறும். இது கண்டிக்குள்ளாகவே நடைபெறும். கண்டியில் வசிக்கும் பெண்கள் இதற்கு விண்ணப்பிக்க இயலும்.

ஆண் பெண் பிரிவுகளுக்கிடையிலான இந்தப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுபவர்களுக்கு சைக்கிள்களும் பணமும் பரிசாக வழங்கப்படவுள்ளன.

போட்டிகளில் கலந்து கொள்வோர் விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் திகதி ஜூன் மாதம் 15ஆம் திகதியாகும்.

[இ—017]

## விளையாட்டு பகுதி

உதைபந்தாட்டம்

## உலக கிண்ண போட்டி: சீர்குலைக்க முயற்சி

லண்டன், மே 7

எதிர்வரும் மாதம் இத்தாலியில் கோலாகலமாக ஆரம்பமாகவிருக்கும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை சீர்குலைக்க இங்கிலாந்து மற்றும் நெதர்லாந்து உதைபந்தாட்ட வன்முறையாளர்கள் திட்டமிட்டிருப்பதாக இங்கிலாந்து பொலிஸார் இத்தாலிக்கு முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறான தகவல் கிடைத்துள்ளதையடுத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரசிகர்கள் என்ற பாகுபாடு காட்டாத எல்லா உதைபந்தாட்ட வன்முறையாளர் பேரிலும் கடுமையாக நடந்து கொள்ளுமாறு இங்கிலாந்து இத்தாலியைக் கேட்டுள்ளது.

பிரச்சினைகளை ஏற்படுத்தும் பிரிட்டிஷ் உதைபந்தாட்ட ரசிகர்கள் பேரில் இத்தாலி கடுமையாக நடந்து கொள்ள வேண்டுமென்று நாம் வேண்டுகோள் விடுக்கிறோம் என்று இங்கிலாந்து அதிகாரி ஒருவர் [illegible] யாகக் கொண்டு அவர்கள் எதிர்காலத்தில் வெளிநாட்டு ஆட்டங்களில் பார்வையாளராகக் கலந்து கொள்வதைத் தடை செய்ய முடியும்.

பிரிட்டிஷ் ரசிகர்கள் உலகக் கிண்ண ஆட்டங்களில் விழிப்பாக நடந்து கொள்ள வேண்டுமென அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

1985 ஆம் ஆண்டு பிரெஸ்ஸல் நகரின் ஹைசல் உதைப்பந்தாட்ட அரங்கில் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையின் போது 37 பேர் மரணமடைந்தனர். பிரிட்டிஷ் ரசிகர்கள் இத்தாலிய ரசிகர்கள் மேல் மிருகத்தனமான தாக்குதலில் இறங்கியதாலேயே இம்மரணங்கள் நிகழ்ந்தன. இதன் பின் இங்கிலாந்து உதைபந்தாட்டக் கழகங்கள் ஐரோப்பிய கிண்ண போட்டியில் கலந்து கொள்வது முற்றாகத் தடை செய்யப்பட்டது.

(ரி—032)

## வானொலி

### 8—5—1990

காலை

5-00 நாதாஞ்சலி
5-05 தோத்திரமாலை — ஸ்ரீதேவி கருமாரியம்மன் சுப்ரபாதம்
5-30 பாமாலை — முருகன் பிள்ளைத் தமிழ்
5-45 சைவநற்சிந்தனை
5-50 இஸ்லாமிய நற்சிந்தனை
5-55 பக்திப் பாடல்
6-00 வர்த்தக சேவை

### 9—5—1990

5-00 நாதாஞ்சலி
5-05 தோத்திரமாலை — விஷ்ணு சகஸ்ரநாமம்
5-30 பாமாலை — திருவாசகம் திருப்பாசுரம்
5-45 சைவநற்சிந்தனை
5-50 இஸ்லாமிய நற்சிந்தனை
5-55 போதிமாதவனின் போதனைகள்
6-00 வர்த்தக சேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள் கண்ணோட்டம்
6-50 அறிவிப்புகள்
7-00 வர்த்தக சேவை
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தக சேவை
8-00 புல்லாங்குழல் — நீலா குஞ்சுமணி

நாள் ஒளிபரப்பு ஒன்று]
6-00 மு ப அட்ட சில்லும், புத்த பூஜாவும்
6-45 வெசாக் செய்தி — மகா நாயக்கர் மல்வத்தை பீடம்
6-55 வெசாக் செய்தி — மகா நாயக்கர் அஸ்கிரிய பீடம்
7-05 வெசாக் செய்தி — மகா நாயக்கர் — ரமண்ணா மகாபீடம்
7-15 வெசாக் செய்தி மகா நாயக்கர் — அமரபுர மகா பீடம்
7-20 பக்தி கீ
7-45 புடிஸ்ற் ரோக் (தமிழ்)
8-00 தர்மானு சாசனாலி
8-45 சத்தி குப ஜாதகய
9-30 புடிஸ்ற் டிஸ்கசன்

விமான சேவைகள்

மே 8 (செவ்வாய்க்கிழமை)

வந்து சேரும் நேரம்

தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறுதோறும் வெளிவரும்

# தேர்தல் பணிகளில் ஆசிரியர்கள், அதிபர்கள்

## அமைச்சு பணிப்பு

கண்டி, மே 6

தேர்தல் பணிகளில் ஈடுபடும் பொருட்டு ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோர் பணிக்கப்பட்டுள்ளனர்-

நடைபெறவிருக்கும் மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை ஆகியவற்றுக்கான தேர்தல்களில் பணியாற்றுவதற்கு பிரதேச கல்விப் பணிப்பாளர்களின் ஊடாக மாவட்ட தேர்தல் உதவி ஆணையாளர்கள் விண்ணப்பங்களைக் கோரியுள்ளனர்-

வாக்குச் சாவடிகளில் பணியாற்றுதல், வாக்குகளை எண்ணுதல், வாக்குப் பதிவுகளுக்குப் பொறுப்பாக இருத்தல் போன்ற பணிகளுக்கு கல்விச் சேவையில் ஈடுபட்டிருப்போரையும் நியமிக்க தீர்மானிக்கப்பட்டிருக்கிறது-

இவ்வாறு கடமைகளுக்குத் தெரிவு செய்யப்படுவோர் தபால் மூலம் வாக்களிக்கும் சலுகையைப் பெறுவர்-

இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் இதற்கான விண்ணப்பங்களை அமைச்சின் செயலாளர் கலாநிதி குணசிங்க சகல உயர் அதிகாரிகளை அனுப்பலாம் என பொது நிர்வாக மாகாண சபைகளையும் திணைக்களங்கள் ஊடாகக் கேட்டுள்ளார்-

அரசாங்கத்தின் கொள்கைப்படி ஜூலை மாதம் 17 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல்கள் நடைபெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது- (ல-017)

## வடக்கு கிழக்கில் மின்சார சபைக்கு ரூ. 10கோடி பாக்கி

இலங்கை மின்சார சபைக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து 10 கோடி ரூபாவுக்கு மேல் பாக்கி வர உள்ளது-

இவ்வாறு எரிசக்தி, மின்சக்தி அமைச்சர் திரு சந்திரா பண்டார தினபதிக்குத் தெரிவித்தார்-

வடக்கு, கிழக்கு மாகாண சபை இதனைச் சேகரித்து அனுப்பியிருக்க வேண்டும்- எனினும் நிலைமை சீர்கெட்டதனால் கடந்த வருடமும் பணம் சேகரித்து அனுப்ப முடியவில்லை-

இந்த வருடம் ஜனவரி மாதத்தில் இருந்து மாகாண சபை பாக்கியை ஒழுங்காகச் செலுத்தி வருகிறது-

இந்தப் பகுதிகளில் மின்மாற்றிடு, உப மின் நிலையங்கள் பாதிக்கப்பட்டிருந்ததனால் மின் விநியோகம் குறிப்பிட்ட காலப் பகுதியில் சீராக இருக்கவில்லை-

எனவும் திரு பண்டார கூறினார். [இ-கு]

## 8 மாதங்களுக்குள் எங்கள் குடும்பத்தில் நடந்த 2ஆவது சம்பவம் இது

## விமானியின் தாய் கவலை

கொழும்பு, மே 7

எட்டு மாதங்களுக்குள் எங்கள் குடும்பத்தில் நடந்த இரண்டாவது துக்க சம்பவம் இது-

காலஞ்சென்ற விமான ஓட்டி அருண பிரசாந்த பீரிஸின் தாயார் திருமதி வீற்றிஸ் பீரிஸ் இவ்வாறு கண்ணீர் மல்க கூறினார்-

நேற்று முன்தினம் காலை ஜீப் ஒன்று வேகமாக வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தது- நான் நினைத்தேன் எனது மகன் அருண பிரசாந்த தான் வருகிறார் என்று-

ஆனால் அந்த ஜீப்பில் வேறு 4 விமானப்படை அதிகாரிகளே காணப்பட்டனர்- அவர்களே எனது மகன் விமான விபத்தில் இறந்து விட்டதாகக் கூறினர்- என்னால் நம்பவே முடியவில்லை- பிரமித்து போனேன்-

கடந்த வருடமும் எனது 2 ஆவது மகன் சமிந்திர இனந்தெரியாத நபர்களினால் கொண்டு செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்-

நான் இப்போது எனது இரண்டு மகன்களையும் இழந்து தவிக்கிறேன் எனது அன்பு மகன் அருண பிரசாந்த சென்ற மாதம் வீட்டுக்கு வந்து வெசாக்குக்கு மீண்டும் வருவதாக கூறி சென்றான்-

அவனின் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன் இந்த புனிதமான நாளிலும் எனக்கு இந்த நிலை ஏற்பட வேண்டுமா? என விம்மி விம்மி அழுதபடி சொன்னார்- விமான ஓட்டியின் தாயார்-

திரு அருண பிரசாந்தவின் தந்தை திரு எல் டபிள்யூ பீரிஸ் கொழும்பில் தனியார் நிறுவனம் ஒன்றில் தொழில் புரிகிறார் அவர் கூறியதாவது-

எங்களது ஒரு மகன் இறந்த பின்பு நாங்கள் அனைத்திற்குமே பிரசாந்தவை எதிர்பார்ப்போம் அவன் இறந்து விட்டான் என்பதை என்னால் நம்பவே முடியவில்லை-

இரண்டு நாட்களுக்கு முன்னர் தான் தொலைபேசியில் என்னோடு பேசி வெசாக்கிற்கு வீட்டிற்கு வருவதாகக் கூறினான்- இதனைக் கேட்டு (எனது மனைவி அவனின் தாயார் பெருமைப்பட்டுக் கொண்டார்-

அப்படியான மகனை இறப்பதற்கு முன்னர் எங்களால் பார்க்க முடியவில்லையே...!

என கண்ணீர் சிந்தினார் தந்தை- [இ-கு]

## மலையக மக்களில் ஒரு சாரரை நாட்டை விட்டு வெளியேற்ற முயல்வது நல்லதல்ல

கொழும்பு, மே 7

— ஈரோஸ்

காலங்காலமாக இந்த நாட்டை வளம்பெறச் செய்த மலையக மக்களில் ஒரு சாரரை நாட்டை விட்டு வெளியேற்ற முயல்வது நன்றி மறந்த செயலாகக் கருதப்படலாம்-

ஈரோஸ் இயக்கப் பேச்சாளர் ஒருவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளது-

கடந்த 200 ஆண்டு காலமாக இலங்கைக்காக தங்களை உழைப்பினாலேயே அர்ப்பணித்த மக்களை வெளியேற்ற முயல்வது ஏற்றுக் கொள்ளக் ...கூடியதல்ல-

இந்திய பிரஜாவுரிமையுள்ள இந்தியர்கள் அனைவரும் நாட்டை விட்டு வெளியேற்றப்படுவார்கள் என அமைச்சரவைப் பேச்சாளரான திரு ரஞ்சன் விஜயரட்ன அண்மையில் கூறி இருந்தார்-

அரசாங்கத்தின் இந்த முடிவைக் கண்டித்தே ஈரோஸ் மேற்கண்டவாறு கருத்துக் கூறியது-

இது தொடர்பாக ஈரோஸ் பேச்சாளர் மேலும் கூறியதாவது-

"நாம் பிறந்த மண் இதுதான் நாம் இருக்கும் நாடும் நமது தான்" என்ற முழக்கத்தை முன்வைத்து ஐக்கியத்தை வலியுறுத்தி வரும் மலையக மக்களில் ஒரு சாராரை வலுக்கட்டாயமாக திருப்பி அனுப்ப முயல்வது எந்த வகையிலும் நியாயமாகத் தெரியவில்லை-

ஜனநாயக ரீதியாக மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முயல்பவர்கள் பலவீனப்பட்டுப் போவதனால் அதன் விளைவுகள் நன்மை பயக்காது-

ஈரோஸ் மிக நீண்டகாலமாக மலையக மக்களின் நலன்களுக்காக குரல் கொடுத்துவந்துள்ளது-

1987 ஆம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஏற்பட்ட போது கூட மலையக மக்கள் தொடர்பாக அதில் பிரஸ்தாபிக்கப்பட்டவை குறித்த எமது அதிருப்தியை பகிரங்கமாகவே தெரிவித்திருந்தோம்-

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் காலாவதியாகி பல ஆண்டுகளாகி விட்டது. அண்மைய இலங்கை - இந்திய ஒப்பந்தம் கூட ஊசலாடும் நிலையில் உள்ளது-

தமிழ் பேசும் மக்களின் ஒரு அங்கமான மலையக மக்களுக்கு எதிராக இந்த ஒப்பந்தம் என்ற பூதத்தை பிரயோகிப்பது அறிவுடைய செயலாகாது-

மேலும் அமைச்சரவைப் பேச்சாளரான திரு ரஞ்சன் எமது அமைப்பைப் பற்றி பத்திரிகை ஒன்றுக்கு கருத்து தெரிவித்துள்ளமை எம்மை சங்கடப்பட வைத்துள்ளது-

## திருச்சியில் பட்டாசு வெடி விபத்தில் மூவர் பலி

கொழும்பு, மே 7

தமிழ்நாடு, திருச்சி மாவட்டத்தில் ராஜாங்க திருமலையில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட பட்டாசு வெடி விபத்தொன்றில் மூவர் கொல்லப்பட்டனர்-

மேலும் 15 பேர் படுகாயம் அடைந்தனர்- அவர்களில் 10 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது-

திருச்சி மருத்துவமனையில் இவர்கள் சிகிச்சை பெற்று வருகிறார்கள்-

ராஜாங்க திருமலை பெரிய நாயகி அம்மன் சித்திரை திருவிழாவின்போது வாணவேடிக்கைக்காக வாங்கப்பட்ட பட்டாசுகளே இப்படி திடீரென வெடித்துள்ளன-

மழை காரணமாக அங்கு ஒதுங்கி இருந்தவர்கள் இதனால் காயமடைந்தனர்-

இதனை அகில இந்திய வானொலி அறிவித்தது- [இ-ந]

## இலங்கை மக்கள் கட்சியின் தலைவி சந்திரிகாவை கட்சியில் இருந்து விலக்க தீர்மானம்

கொழும்பு, மே 7

இலங்கை மக்கள் கட்சியின் தலைவி திருமதி சந்திரிகா குமாரணதுங்க கட்சியில் இருந்து வெளியேற்றப்படுவார்-

இவ்வாறு இலங்கை மக்கள் கட்சியின் அரசியல் குழுவினர் தீர்மானித்திருக்கின்றனர்-

கட்சியின் தேசிய அமைப்பாளர் திரு ஒஸி அபேகுணசேகர

கட்சியின் கொள்கைகளை விமர்சித்தல், கட்சி நடவடிக்கைகளை பகிரங்கப்படுத்தல், கட்சியின் நடவடிக்கைகளை விடுத்து மற்றைய அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த ஆயத்தமாதல் போன்ற நடவடிக்கைகளினால் இவர்களை கட்சியில் இருந்து வெளியேற்றுவதாக தெரிவிக்கப்படுகின்றது-

## புனித ஹஜ் யாத்திரை 1990

இன்ஷா அல்லாஹ், புனித ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்லும் ஹஜ் யாத்திரிகர்களுக்கு முன்னைய வருடங்களைப் போல் இவ்வருடமும் அனுபவமும் திறமையும் வாய்ந்த மௌலவிகளின் வழிநடத்தலுடன் முஸ்லிம் சமய கலாச்சாரத் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள எமது—

### சேஃப்வே டிரவல்ஸ் நிறுவனம்

குறைந்த செலவில் நிறைந்த வசதிகளை செய்து கொடுக்க முன் வந்துள்ளது.

1 புனித மக்காவில் ஹரம் ஷரீப்பிலிருந்து 25 மீற்றர் அருகில் பாபுல் ஹிஜ்றா எனும் வாசஸ்தலத்துக்கு முன்புறமாகத் (ஏ/சி) தங்குமிட வசதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

2 விமான டிக்கட், குர்பான் செலவின்றி சகல வசதிகளு

புறமாகத் (ஏ/சி) தங்குமிட வசதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

2 விமான டிக்கட், குர்பான் செலவின்றி சகல வசதிகளுடன், எமது கட்டணம் 40,000/- ரூபாய்.

3 மினாவில் தங்குவதற்கு குளிரூட்டப்பட்ட (Air Cooler) ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

4 விமான டிக்கட் கட்டணத்தை பின்னர் அறிவிப்போம்.

எமது நிறுவனத்தின் மூலம் நீங்கள் புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற விபரங்களுக்கும் ஆசனப் பதிவுகளுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்.

Al—Haj M R M Farook J P
T phone: Off 566715, 27161, 23183
Res: 699410, 686388

Al Haj Moulavi H Salahudeen (Bari)
Jumma Masjid, Kandy
T Phone: 08/32039, 24193

Al Haj Moulavi A L M Kaleel BA

Al-Haj Moulavi M Y UbyDullah
C/o Yehiya Motors, Ratnapura
TPhone: 045/2411, 2768

Al-Haj N M Mansoor (Vice Principal)
Madrasathul Hilal Negombo

**SAFEWAY**

**TRAVELS & TOURS**

185, Old Moor Street Colombo 12
T Phone: 546715 27161, 23183

கீழ்வரும் ஹஜ் குழுவினரும் சேஃப்வே டிரவல்ஸ் நிறுவனத்துடன் இணைந்து செல்வர்

**RAHUMATH PILGRIMWAYS**

(House of Ramumath)
20 Nimara Mariya Mawatha
Hendala

எனக் கண்ணீர் சிந்தினார் தந்தை- [இ-கு]

யத்தை வலியுறுத்தி வரும் மலையக மக்களில் ஒரு சாராரை

# முஸ்லிம்காங்கிரஸ் தவிசாளர்பாங்கொக் விஜயம்

கொழும்பு, மே 7

மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச மாநாடொன்றில் கலந்து கொள்வதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் ஜனாப் எம் எச் ஷெய்கு இஸ்ஸதீன் நேற்று பாங்கொக் பயணமானார்-

இந்த மாநாடு இன்று முதல் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை பாங்கொக் நகரில் நடைபெறவிருக்கிறது-

இலங்கையில் நீதிக்கும், சமாதானத்திற்குமான உலக ஒற்றுமை அமைப்பு இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது-

இலங்கையில் இருந்து சுமார் 15 பேர் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதாக தெரிய வருகிறது-

வடக்கு, கிழக்கு பகுதிகளில் நிலவி வரும் பிரச்சினைகள், (குறிப்பாக முஸ்லிம்கள் ஆயுதக் குழுக்களின் அடக்கு முறைக்கு ஆளாக்கப்படுதல்) குறித்து இங்கு ஆராயப்படும்-

இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்- (இ-ற)

# சாக்கடை நீர் வரும் கால்வாய்கள்மேல் சட்டவிரோத கடைகள்!

புத்தளம் மே 6

புத்தளத்தில் உள்ள குருநாகல் வீதியில் சாக்கடை நீர் ஓடும் கால்வாய்களின் மேல் திடீர் திடீரென சட்டவிரோத கடைகள் கட்டப்பட்டு வருகின்றன-

இதன் மூலம் போக்குவரத்துக்கு பெரும் இடைஞ்சலும் சுற்றாடல் பெரிதும் மாசுபடும் அபாயமும் தோன்றியுள்ளது-

சாக்கடைக்கு மேலாக பலகைகள் போடப்பட்டு அதன் மேல் இந்தத் திடீர்க் கடைகள் கட்டப்பட்டுள்ளன-

சட்டபூர்வமற்ற முறையிலும் சுற்றாடலுக்கு பெரும் அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியுள்ள இச்செயலை உடன் தடுத்து நிறுத்தப்படல் வேண்டுமென புகார் செய்யப்பட்டுள்ளது-

புத்தளம் நகரசபை பொது சுகாதாரப் பரிசோதனைப் பிரிவினர் உடனடி நடவடிக்கை எடுத்து இந்த சட்ட விரோத கடைகளை அகற்ற வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்- [இ—241]

றக்கு கருத்து தெரிவித்துள்ளமை எமமை சங்கடப்பட வைத்துள்ளது-

மலையக மண்ணுக்கும், மக்களுக்கும் நாம புதியவர்கள் அல்லர்- வன்முறை மீது நாட்டம் கொண்டவர்களும அல்லர் இதனை சமபந்தப்பட்ட அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கைத் திவை வளம் பெறச் செய்த மக்களை இங்கேயே வைத்திருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும-

இவ்வாறு ஈரோஸ் பேச்சாளர் தெரிவித்தார்- (இ-கு)

## சமய நிகழ்ச்சிகள்

### ஜெயந்தி நகரில் சித்திரா பௌர்ணமி திருவிளக்குபூஜை

கொழும்பு, மே 7

கொழும்பு ஜெயந்தி நகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் நாளை 9 ஆம் திகதி புதன் கிழமை சித்ரா பௌர்ணமி பூஜையும் திருவிளக்குப் பூஜையும் வெகு சிறப்பாக இடம் பெறும்-

காலை 6 மணிக்கு ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாளுக்கும், ஸ்ரீ விசாலாட்சி அம்பாளுக்கும ஸ்நபனா அபிஷேகம நடைபெறும்-

மாலை 6 மணிக்கு மங்கல மங்கையரும் கன்னியரும திருவிளக்குப் பூஜையில் கலந்து கொள்வர்-

தொடர்ந்து ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் எழுந்தருளி பக்தர்களுக்கு இன்னருள் புரிவார்- [இ]

கட்சியின் அரசியல் குழுவினர் தீர்மானித்திருக்கின்றனர்-

கட்சியின் தேசிய அமைப்பாளர் திரு ஒஸி அபேகுணசேக்கரவின் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரசியல் குழுக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது-

தலைவி திருமதி சந்திரிக்கா குமாரணதுங்க உட்பட மாகாண சபை உறுப்பினர்கள் 12 பேரையும கட்சியில் இருந்து நீக்க முடிவு செய்யப்பட்டுள்ளது-

இதனை கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தினபதிக்குத் தெரிவித்தார்-

மாதல் போன்ற நடவடிக்கைகளினால் இவர்களை கட்சியில் இருந்து வெளியேற்றுவதாக தெரிவிக்கப்படுகின்றது-

கலாநிதி ராஜித சேனாரத்ன, மாகாண சபை உறுப்பினர் திரு யசபாலித நாணயக்கார, மாகாண சபை உறுப்பினர் திரு ரெஜினோல்ட் குரே போன்ற சிரேஷ்ட உறுப்பினர்கள் வெளியேற்றப்படுவோரில் அடங்குவர்

இதற்கிடையில் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் தலைவி திருமதி சந்திரிகா குமாரணதுங்க கடந்த சனிக்கிழமை லண்டன் பயணமானார்- (இ-ழ)


## தமிழ் நூல்களும் இஸ்லாமிய நூல்களும்

இலங்கையிலும் வெளிநாட்டிலும் அச்சிடப்பட்ட தமிழ் — இஸ்லாமிய நூல்கள் தொடர்பான உங்கள் தேவைகளுக்கு விஜயம் செய்யுங்கள்.



எம். டி. குணசேன அன்ட் கம். லிமிட்.

217, ஒல்கொட் மாவத்தை கொழும்பு—11

தொலைபேசி- 23981—84.



இப்பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இன்டிபென்டன்ட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12. இலங்கை தபால் பெட்டி இல 1613 வெளியிட்ட திகதி 8 மே 1990

DINAPATHI, 5, Gunasena Mawatha, Colombo — 12
P.O. Box 1613.